Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

TOSHIBA

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

IIS Office Automation

No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 16 (08.03.2004) திங்கட்கிழமை இதழ் :160

## மட்டு - அம்பாறை போராளிகளை

# ஒருங்கிணைக்கும் முயற்சியில் விசேட தளபதி ரமேஷ் தீவிரம்!

### முக்கியஸ்தர்கள் தொடர்ந்தும் வன்னிவருகை

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள போராளிகள் மற்றும் பொறுப்பாளர்களை ஒருங்கிணைத்து தமது கட்டுப்பாட்டின்கழ் கொண்டுவரும் முயற்சியில் மட்டு. - அம்பாறை மாவட்டத்துக்கான புதிய விசேட தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரமேஷ் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தளபதி ரமேஷ் தமது கட்டளையின் கீழ் போராளிகள் மற்றும் பொறுப்பாளர்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை, அங்கிருந்து முக்கிய பொறுப்பாளர்கள் பலர் தொடர்ந்தும் வன்னிப் பகுதிக்கு வந்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கருணாவினால் நேற்றுமுன்தினம் மட்டு - அம்பாறை அரசியற் பொறுப்பாளரென அறிவிக்கப்பட்ட கிழக்குப் பகுதி மூத்த உறுப்பினர் கரிகாலன் நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சிக்கு வந்துள்ளார்.

இவருடன் மேலும் பல பொறுப்பாளர்களும் வந்துள்ளதாகவும், மேலும் பலர் மட்டக்களப்பு பகுதியிலிருநது வன்னிக்குத் திரும்பியதாகவும் ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் பணியாற்றும் படையதிகாரிகளை ஆதாரம் காட்டி வெளியிடப்பட்ட செய்திகள் தெரிவித்தன.

கடந்த மூன்று நாட்களில் மட்டும் மட்டு-அம்பாறை பகுதிகளிலிருந்து தளபதிகள் மற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவருக்கு அச்சுறுத்தல்

### சொந்த இடங்களுக்குத் திரும்பினர்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து - நூற்றிற்கு மேற்பட்ட மாணவர்கள் பாதுகாப்பு கருதி அங்கிருந்து வெளியேறியிருப்பதாக தெரியவருகிறது.

இவ்வாறு அங்கிருந்து வெளியேறிய மாணவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதற்றமான சூழ்நிலையை அடுத்து மாணவர்களுடன் பிற மாவட்டங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் வெளியேறியுள்ளனர். இதனால் கிழக்கு பல்கலைக்கழகத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருந்த மாதாந்த பரீட்சைகள் யாவும் அடுத்தமாதம் ஆறாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு வெளியேறிய மாணவர்களில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்

(12 ஆம் பககம் பார்க்க)

# அந்நிய சக்திகளின் தூண்டுதலினாலேயே

# கருணா தன்னிச்சையாக செயற்படுகிறார்!

## இராணுவ தளத்தில் பாரிய வெடி விபத்து!

### ஆயுத கொள்கலன் நாசம்

(கொழும்பு)

கொழும்பு - கணேமுல்லையில் உள்ள இராணுவ கொமாண்டோ படைப்பிரிவின் தலைமையகத்தில் நேற்றுக்காலை பாரிய வெடிவிபத்து ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை 11 மணியளவில், கொமாண்டோப் படைப்பிரிவின் தலைமையகத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் அடங்கிய பாரிய கொள்கலன் ஒன்றே வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிவிபத்தையடுத்து, கணேமுல்லை இராணுவத் தளத்தில் பாரிய தீவிபத்து ஏற்பட்டதாகவும் இதையடுத்து தீயை அணைப்பதற்கு கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)



**கருணாவின் தன்னிச்சையான இந்த நடவடிக்கைகளுக்கு பின்னால் புறச்சக்திகள் உள்ளன.**

**இது தொடர்பாக அவர் தனது சிரேஷ்ட உறுப்பினர்கள் எவருடனும் கலந்தாலோசிக்கவில்லை.**

**அத்துடன், தனது இந்த நடவடிக்கைக்கு தளபதிகள் மற்றும், பிராந்திய பொறுப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு அவர் வற்புறுத்துகின்றார். ஆனால், அவர் இதில் வெற்றியடையமாட்டார்.**

இவ்வாறு மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சி வந்துள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண மூத்த உறுப்பினர் கரிகாலன் நேற்று மாலை கிளிநொச்சியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எமது மக்கள் மீது கருணா தனது பொறுப்பற்ற நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வாராக இருந்தால் அவர் சர்வாதிகாரி 'பொல் பொட்' போன்று அடையாளப்படுத்தப்படுவார் எனத் தெரிவித்த கரிகாலன், அங்கு மேலும் தெரிவித்ததாவது-

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இன்று எமது தேசியத் தலைவரை நிராகரிக்கத் தயாரில்லை. இதை நான் தெளிவாகக் கூறுகின்றேன்.

அண்மையில் நடந்த 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளில் கூட ஆயிரக் கணக்கான மக்கள் தலைவரின் படங்களைத் தாங்கியவாறு புலிகள் தான் தமிழர், தமிழர் தான் புலிகள் என்றும் தமிழ் தேசியம், தேசிய தலைமை போன்றவற்றை வெளிப்படுத்தினர்.(12 ஆம் பக்கம் பார்க்க)

## 3 பொறுப்பாளர்களை நீக்கினால் மீண்டும் இணையத் தயாராம்!

### நிபந்தனை விதிக்கிறார் கருணா

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் தான் மீண்டும் இணைந்து செயற்படுவதாக இருந்தால் - புலிகள் அமைப்பில் மூன்று முக்கிய பொறுப்பாளர்களை இயக்கத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

தென் தமிழீழ மக்களுக்கு உரிய பங்கு அளிக்கப்படவில்லை எனக்கூறி தனித்துச் செயற்படப்போவதாக அறிவித்த கருணாவை விடுதலைப் புலிகள் தமது அமைப்பிலிருந்து நேற்று முன்தினம் நீக்கினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு விபத்துக்களில் ஒருவர் பலி, மூவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் நேற்று ஒருவர் மரணமடைந்ததுடன், மூவர் படுகாயமடைந்தனர்.

தாவடிச் சந்திக்கருகில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் ஹையேஸ் வான் ஒன்று பாதசாரியை மோதியதில் அவர் அந்த இடத்திலேயே மரணமடைந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நிலைமை

## எப்படி கையாள வேண்டுமென்பதை தலைவர் விளக்கமாக கூறியுள்ளார்

### தளபதி ரமேஷ் தமிழ்நெற்றுக்கு பேட்டி



(கிளிநொச்சி)

எமது தேசியத் தலைவர் மட்டக்களப்பில் தற்போது உருவாகியுள்ள பிரச்சினையை எப்படிக் கையாளவேண்டும் என்பது குறித்து மிகத் தெளிவானதும், விளக்கமானதுமான பணிப்புரைகளை தந்துள்ளார். அதன்படியே நாம் செயற்படுவோம்.

இவ்வாறு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்துக்குப் பொறுப்பாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தளபதி ரமேஷ், தமிழ்நெற் இணையத்தளத்துக்கு நேற்று, அளித்த பேட்டியில் தெரிவித்தார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

கருணாவின் பிரச்சினை ஒரு தனிநபர் சார்ந்தது. மட்டக்களப்பு உட்பட கிழக்கிலங்கையின் அனைத்து விடுதலைப் புலி உறுப்பினர்களும் எமது தேசியத் தலைவரின் பின்னேயே அணிவகுத்து நிற்கின்றனர்.

இதற்கு முன்னர் பல தடவைகள், கருணாவை நேரடியாக எமது தலைவருடன் கதைத்து இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும்படி நாம் கேட்டுக் கொண்டிருந்தும், கருணா அதைக் கருத்திற் கொள்ளவில்லை. மாறாக, இறுதிவரை காத்திருந்ததுடன், நாம் அவர் சார்பில் தலைவருடன் நேரடியாகக் கதைப்பதாகக் கேட்டபோது (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# நேசக்கரங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு தமிழ் - முஸ்லிம் உறவை பலப்படுத்துவோம்

## கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளர் இமாம்

தலைமுறை தலைமுறையாக வடக்கு மண்ணில் வாழ்ந்த தமிழ்-முஸ்லிம் மக்களிடையே வலுவான பிணைப்புக்களும், உறவுகளும் தொடர்ந்து வந்திருக்கின்றன. மத ரீதியாக மட்டும் வேறுபட்டாலும், தமிழ் - முஸ்லிம் மக்களாகிய நாம் சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் நீண்டகாலமாக நெருக்கமான உறவுகொண்டு வாழ்ந்து வந்திருக்கிறோம். தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நிலவிய நீண்டகால நட்புறவு என்றும் அழிக்கமுடியாததும், பிரிக்கமுடியாததுமாகும்.

நீண்ட இடைவெளியின் பின்னராவது எமைநோக்கி நீட்டப்பட்ட நேசக்கரங்களைப் பற்றிப் பிடித்து தமிழ் - முஸ்லிம் உறவைப்பலப் படுத்துவது காலத்தின் தேவையாகும். மீண்டும் துளிர்த்திருக்கும் தமிழ் - முஸ்லிம் உறவுக்கு உரமிட்டு வளர்ப்பது சமாதானத்தை விரும்பும் யாவரதும் கடமையாகும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில், என்னையும் இணைத்துள்ளதானது தமிழ் மக்கள், முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள உறவைக் கட்டியெழுப்பும் நோக்கிலும் முஸ்லிம்கள் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நோக்கிலும் அமைந்துள்ளது.

எனவே, கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து மீண்டும் தமிழ் - முஸ்லிம் உறவை பலப்படுத்துவதன் மூலமே நம் உரிமைகளை வென்றெடுக்கமுடியும். எனவே, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து எம் ஒற்றுமையை பலப்படுத்துவோம். எம் உரிமைகளை வென்றெடுப்போம் எனத்தெரிவித்தார்.

### பன்றிகள் தொல்லை

புத்தூர் கிழக்கில் பன்றிகளின் தொல்லையால் விவசாயப் பயிர்கள் நாசமாக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிளகாய், வெங்காயம் மற்றும் மரக்கறிப் பயிர்களே, இவ்வாறு பன்றிகளினால் நாசம் செய்துவரப்படுகிறது. இரவு நேரங்களில் கூட்டமாக வரும் பன்றிகளே இவ்வாறு பயிர்களை அழித்துவருவதாகத் தெரிய வருகிறது. இவ்வாறு பன்றிகளால் பயிர்கள் நாசம் செய்யப்படுவதால் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)


ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல் சிம்பு, சோனியா அகர்வால், நாசர்

கோவில்



10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

திறைஞ்சனைஸ் சங்கானை

விஜய், சூர்யா, தேவயாணி நடித்த

ப்ரெண்ட்ஸ்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00. (பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

BLOOD SPORT - 2

(சி-2262)

**பாடசாலை அதிபர்களே! மாணவமணிகளே!**

பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், ஆய்வு கூட உபகரணங்களான நுணுக்குக்காட்டி பரிசோதனை உபகரணங்கள் மனித உடல்களின் மாதிரி உருவங்கள், OHP புறஜெக்ரர்கள், ஸ்கிரீன் மற்றும் அலுவலக மேசைகள், அலுமாரி, புத்தக அலுமாரிகள், பயில் அலுமாரிகள், Daito குறியீட்டு றோணியோ இயந்திரங்கள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

குறிப்பு:- எம்மிடம் ஞான உபதேச புத்தகங்கள், பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு சேர்ந்த பைபிள்கள் விற்பனைக்கு உண்டு.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்

T.P:- 021-2225542

(சி/2300)



**வீடு விற்பனைக்கு உண்டு**

சுதுமலையில் மாடிவீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன், கீழே குறிப்பிடும் நேரத்தில் தொடர்புகொண்டு மேலதிக விபரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல :

416 - 497 - 2867 (கனடா)

இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணியில் இருந்து காலை 9 மணிக்குள் தொடர்புகொள்ளவும்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெண் வேட்பாளர்

தமிழ் தேசிய இனத்தின் எழுச்சிக்கு வலுச்சேர்த்து களத்தில் போராடி, வீரசாதனைகள் புரிந்து எமது பெண் போராளிகள் பெற்ற வெற்றிகளின் தொடர்ச்சியாய் சமூகப் பெண்களாகிய நாம் எமது கைகளை உயர்த்தி பலமாய் ஒன்றிணைந்து அரசியல் களத்திலும் எமது வெற்றிகளை உறுதி செய்வோம்.




**பத்மினி சிதம்பரநாதன்**

பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்களில் ஒருவரும், சமாதான பேச்சுக்களில் பெண்கள் விவகாரக் குழுவின் தமிழ் பெண் பிரதிநிதியும்

**இலங்கை தமிழரசுக் கட்சி**

| | | |
|---|---|---|
| | X | X |

தொடர்புகட்கு :- பெண்கள் பண்பாட்டு மையம், 439, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(659)

# வடமேல் மாகாணசபைத் தேர்தல் ஏப்ரல் 24 ஆம் திகதி நடைபெறும்

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

வடமேல் மாகாணசபைக்கான தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

50 ஆசனங்களைக்கொண்ட வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல நேற்றுமுன்தினம் முடிவடைந்தது.

இந்தத் தேர்தலில் 729 வேட்பாளர்கள் - 20 அரசியற்கட்சிகள் சார்பிலும் 07 சுயேட்சைக் குழுக்களின் சார்பிலும் போட்டியில் குதித்துள்ளனர்.

இந்தத் தேர்தலின்மூலம் வடமேல் மாகாண சபைக்கு குருநாகல் மாவட்டத்திலிருந்து 33 பேரும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 16 பேரும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவர்.

இந்தத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில போட்டியிட 9 அரசியற்கட்சிகளும், 6 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இவற்றில் எ.ஜே.எம்.கலீல் தலைமையிலான ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணியினதும், ரி.டி.தென்னக்கோன் தலைமையிலான ஐக்கிய சோசலிச கட்சியினதும் வேட்பாளர் பட்டியலகள் நிராகரிக்கப்பட்டன.

அத்துடன் குருநாகல் மாவட்டத்திற்கு 11 அரசியற்கட்சிகளும், ஒரு சுயேட்சைக்குழுவும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய லலித் முன்னணி, பூமி புத்திர கட்சி, சிங்கள மகாசபை, தேசிய அபிவிருத்தி முன்னணி, புதிய ஜனநாயக முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தேசிய கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் கட்சி ஆகியவற்றுடன் வீ.டபிள்யூ.பி.மெண்டிஸ் தலைமையிலான சுயேட்சைக் குழுவும் போட்டியிடுவதற்கு தகைமைபெற்றுள்ளன.

புத்தளம் மாவட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, புதிய ஜனநாயக முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி, இலங்கை முஸ்லிம் கட்சி, றுகுணு மக்கள் முன்னணி, சிங்கள பூமி புத்திர கட்சி, தேசிய அபிவிருத்தி முன்னணி, என்பன போட்டியிடவுள்ளன.

இந்த மாகாண சபை தேர்தலில் 15,39,539 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும்!

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாக இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது குறித்து இந்தியாவிற்குச் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இணக்கம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான படை உயரதிகாரிகள் இந்தியாவிற்குச் சென்று இரு நாடுகளும் பாதுகாப்பு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது குறித்து பேச்சுக்களை நடத்தியதுடன் ஒப்பந்தம் குறித்த திட்டவரைபுகளை தயாரித்திருந்தனர்.

இந்த ஒப்பந்த வரைபை இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் பரிசீலனை செய்து, இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியிருந்தனர்.

இலங்கை அரசும் பரிசீலனை செய்து அதனை இந்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஆயுத பரிமாற்றங்கள், இராணுவத்தினருக்கு பாதுகாப்பு வழங்குதல், புலனாய்வுத் தகவல்களை இரு நாடுகளும் இணைந்து முன்னெடுத்துச் செல்வது பற்றியும் அந்தத் திட்டவரைபில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# மேலும் 3 அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்பார்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மேலும் மூன்று அமைச்சுக்களை விரைவில் ஜனாதிபதி பொறுப்பேற்கவுள்ளதாக ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

விவசாய கால்நடை அமைச்சு, சமுர்த்தி அமைச்சு, மீன்பிடி நீர்வள அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களையே கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி மூன்று அமைச்சுகளையும் பறிப்பதற்கான ஆலோசனைகளை நடாத்தி வருவதாக ஜனாதிபதி செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வன்னி மாவட்ட வேட்பாளர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும்!

## மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள வன்னி மாவட்ட வேட்பாளர்களுக்கு கூடுதலான பொலிஸ் பாதுகாப்பு வழங்கவுள்ளதாக வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஐ.ஆர்.எம். விஜயநாயக்க தெரிவித்தார்.

வேட்பாளர்களாக இருந்து தற்போது பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தற்போது பாதுகாப்பைக்கோரும் பட்சத்தில் அவர்களது அலுவலகங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும்.

ஈ.பி.டி.பி மற்றும் புளொட் ஆகிய கட்சிகளின் வேட்பாளர்களுக்கும், அவர்களது அலுவலகங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் மகேஸ் தவச்செல்வன் வீட்டுக்கும் அவர் பிரசார நடவடிக்கையில் ஈடுபடும போது பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய இடங்களில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே இந்தச் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (03)

# தேர்தலின்போது பொதுமக்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்

## மெத்தானந்த தேரர் கூறுகிறார்

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின்போது நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த வண.எல்லாவெல மெத்தானந்த தேரர் நாட்டுமக்களுக்கு நேற்றுமுன்தினம் ஆலோசனை ஒன்றை வழங்கியுள்ளார்.

1818 ஆம் ஆண்டு இருந்ததைப் போன்ற நிலையொன்றுக்குப் பௌத்தர்கள் தறபோது முகங்கொடுத்துள்ளனர். நாடு - விவசாயம் மற்றும் பொருளாதாரத்தில் சுய அபிவிருத்தி அடையாத காரணத்தால் தற்போது மேற்கையே நம்பியிருக்கவேண்டிய நிலையிலிருக்கிறது.

மதம் மாற்றுவதனை எதிர்த்து எந்தவொரு நடவடிக்கையும் ஜனாதிபதி குழுவினால் எடுக்கப்படவில்லை. இந்த நாட்டில் பௌத்தர்களை மற்றவர்கள் பயமுறுத்தி வாழவைக்கும் நிலை உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வேட்பாளர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படடுள்ளதாக முறைப்பாடு செய்தால் -அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு இராணுவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொலை அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சம்பந்தம் இருக்கின்றதா? என ஆராயப்படவேண்டும்.

அவ்வாறு தொடர்புகள் இருந்தால் அதனை தடைசெய்வதற்கு - சுதந்திரமாகவும், நீதியாகவும் தேர்தல் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

விடுதலைப் புலிகள் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தால் அதனை தடைசெய்வதற்கு கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஜனாதிபதியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பயிலுனர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் சம்பள உயர்வு!

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பயிலுனர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் அனைவருக்கும் இம்மாதக் கொடுப்பனவுடன், அரசு வரவு - செலவுத் திட்டத்தின்போது சிபாரிசு செய்த 1250 ரூபா சம்பள உயர்வும் வழங்கப் படவுள்ளது.

இதற்கான சுற்று நிருபத்தை உடனடியாக அனுப்புமாறு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லைநடராஜா அமைச்சின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் எல்ஜெயவர்த்தனவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

இலஙகைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 1250 ரூபா சம்பள உயர்வு பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதது குறித்து கேள்வி எழுப்பியதையடுத்தே அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லைநடராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்தச் சம்பள உயர்வு 2004 ஜனவரி மாதத்தில் இருந்த வழங்கப்படவுள்ளது.

# அனுரா விடுத்த அச்சுறுத்தல்; எஸ்.பிக்கு பாதுகாப்பு வேண்டும்!

## ஐக்கிய தேசியக்கட்சி கேட்கிறது

அனுரா பண்டாரநாயக்கா - எமது கட்சியைச் சேர்ந்த எஸ்.பி.திஸநாயக்கவுக்கு விடுத்துள்ள அச்சுறுத்தல் காரணமாக அவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைளை உடன்மேற்கொள்ளுமாறு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை ஐக்கிய தேசியக்கட்சி கேட்டுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ - தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டதாவது -

இம்மாதம் 3 ஆம் திகதி வெளியான 'டெய்லி மிரர்' பத்திரிகையில் அனுரா பணடாரநாயக்கா தெரிவித்திருக்கும் சில கருத்துக்கள் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா மிகவிரைவில் சிறையில் அடைக்கப் படுவார். அங்கு ஏறக்குறைய 7 வருடங்கள் அல்லது வாழ்நாள் முழுவதும் கடுங்காவற தண்டனையை அனுபவிப்பார் என்று அனுரா பண்டாரநாயக்கா கூறியிருந்ததாகப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக-பத்திரிகையை மேற்கோள்காட்டி செனரத் கப்புகொட்டுவ தனது கடிதத்தில் தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவித்துள்ளார்.

காபந்து அரசாங்கத்திலிருந்து அனுராவை வெளியேற்றியதுடன், அவருக்குப் பாதுகாப்பு வழங்குவதையும் நிறுத்திவிடுமாறு சந்திரிகாவுக்குத் தான் ஆலோசனை வழங்கியதாக சேனரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு அனுரா பண்டாரநாயக்காவின் கருத்து பயமுறுத்தலாக அமைந்துள்ளது.

அனுரா பண்டாரநாயக்காவின் இத்தகைய கருத்துக்களின் மூலம் ஐ.தே.க ஆதரவாளர்களின்மீது மேற்கொண்ட அச்சுறுத்தல் சட்டத்திற்கு முரணானதாகும்.

இந்நாட்டின் தேர்தல் சட்டங்களுக்கு முரணாக அனுரா பண்டாரநாயக்கா நடந்துகொள்கிறார். சந்திரிகா குமாரதுங்காவிடம் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்கள் இருந்த நிலையில் மட்டக்களப்பு வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை கொல்லப்பட்டுள்ளார். ஆகவே இதற்கான முழுப்பொறுப்பையும் சந்திரிகாவே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சுந்தரம்பிள்ளைக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அதனாலேயே வீட்டில்வைத்துத் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார். காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்தவேளை மீண்டும் சுடப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அவரின் கொலை தொடர்பாக பல்வேறு தரப்பிலிருந்தும் ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சுந்தரம்பிள்ளையை ஐக்கிய தேசியக் கட்சியினரே திட்டமிட்டுக் கொலைசெய்ததாக ஜே.வி.பி. தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இப்படியான கடிதம் ஒன்றை எழுதியதன் மூலம் ஜே.வி.பி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியன எமது கட்சியினருக்குத் தீங்கு விளைவித்துள்ளனர்.

அரசசார்பான குழுக்கள் மற்றும் அரசசார்பான சிங்கள ஊடகங்கள் ஆகியன விடுதலைப்புலிகள் தான் இந்தக் கொலைகளைச் செய்துள்ளார்கள் என்று அவர்களுக்கு எதிராக கருத்துக்களைக் கூறிவருகின்றன.

அதே நேரத்தில் தங்களுக்கும் இந்தக் கொலைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று புலிகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர். புலனாய்வுத்துறை தொடர்ந்தும் இந்தக்கொலையுடன் தொடர்புபட்டவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தேர்தல் அண்மித்துக்கொண்டிருக்கும் வேளையில் வன்முறைகளும், இழப்புகளும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. இவை அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல்கால வன்முறைகளை வன்மையாகக் கண்டித்துள்ள அதேநேரம் ஜனாதிபதியையும் விமர்சித்துள்ளது.

ஜனநாயக ஒருமைப்பாடுகளைக் காணவேண்டுமானால் - குழப்பம், அச்சுறுத்தல் இல்லாத நிலையில் இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இவ்வாறான தேர்தல் நடைபெறுவதற்கு இந்நாட்டின் தலைவர்கள் எல்லோரும் தங்களை முழு அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தவேண்டும். எனவும் ஐ.தே.க கோரியுள்ளது.

# சந்திரிகாவின் சுயரூபம் வெளிப்பட்டிருக்கிறது!

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

ஒலுவில் துறைமுக இழப்பீட்டு விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா தனது சுயரூபத்தை வெளிக்காட்டியுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முஸ்லீம் காங்கிரஸின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒலுவில பிரதேச மக்களிடமிருந்த பணம் கொடுத்துத்தான் வாக்குப் பெறவேண்டிய அவசியம் முஸ்லிம் காங்கிரஸுக்கு இல்லை.

ஒலுவ்வில் துறைமுகம் அமைப்பதற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காணி தொடர்பாக இழப்பீடு வழங்கப்படவேண்டும். இந்த நிதி தொடர்பாக ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கவில்லை. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியை எவரும் வழங்கக்கூடாது என்று ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையிடமிருந்து நிதி வசூலிக்கக்கூடாது எனவும் ஜனாதிபதி உத்தரவு வழங்கியுள்ளார் எனவும் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

# சமநிலையில் முடிவடைந்த வீரர்களின் கிரிக்கெட் போர்!

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆரம்பமான வீரர்களின் கிரிக்கட்போரில் - நாணயச்சுழற்சியில் ஸ்கந்தவரோதயா அணித்தலைவர் மகாஜனா அணித்தலைவரை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

முதலாவது இனிங்ஸில் 5 விக்கட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்ற நிலையில்ஆட்டத்தை இடைநிறுத்திக் கொணட மகாஜனாக் கல்லூரி அணி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது.



ஆர்ஜென்டீன நாட்டு முன்னாள் பிரபல கால்பந்து வீரர் டிகோ மரடோனா, பொலிவியோ நாட்டிலுள்ள ஒரு கால்பந்து கழகத்தை தொடக்கிவைக்கிறார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அணி, சகல விக்கட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் மகாஜனாக் கல்லூரி துடுப்பெடுத்தாடியபோது நேரம் போதாமையால் 20 ஓவர்களில் 3 விக்கட் இழப்புக்கு 65 ஓட்டங்களை அந்த அணி பெற்றது.

இதில் ரவிசங்கர், அச்சுதன், பிரசாந்த, தனஞ்செயன், மயூரன் ஆகியோர் இரண்டு விக்கட்டுக்களைக் கைப்பற்றினர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கிருஷ்ணச்சந்திரா 4 விக்கட்டுக்களையும் சுஜீவன் 2 விக்கட்டுக்களையும் கார்த்தீபன் ஒரு விக்கட்டையும் கைப்பற்றினர்.

சுமன் 46 ஓட்டங்களை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு பெற்றுக் கொடுத்தார். அணித் தலைவர் றஜீவன் 43 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

மகாஜனாக்கல்லூரி சார்பில் அச்சுதன் முதலாவது இன்னிங்ஸில் 108 ஓட்டங்களையும் மயூரன் முதலாவது இன்னிங்ஸில் 32 ஓட்டங்களையும் இர்ண்டாவது இன்னிங்ஸில் 48 ஓட்டங்களையும் பெற்றார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக மகாஜனாக் கல்லூரி அணியின் வீரர் அச்சுதனும் சிறந்த களத்தடுப்பாளராக ரவிசங்கரும் ஆட்டநாயகனாக அச்சுதனும் பரிசில்களைப் பெற்றனர்.

ஸ்கந்தவரோதயக்கல்லூரி சார்பாக சிறந்த பந்துவீச்சாளராக கிருஷ்ணச்சந்திராவும் சகலதுறை ஆட்டக்காரராக சுஜீவனும் தெரிவு செய்யப்பட்டனர். (58,69,72)

## வலைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேசத்தில பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு சென்.மேரிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (68)

## சங்கானை கோட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள் வெளியாகின!

(அராலி)

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலை அணிகள் வருமாறு -

15 வயதுப் பிரிவு - முதலாம் இடம் வட்டு. மத்திய கல்லூரி, இரண்டாமிடம் யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு - முதலாமிடம் விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், மூன்றாமிடம் வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி. (118)

விளையாட்டு

## இல்ல மெய்வன்மை போட்டி

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சரோஜினி வேதநாயகம் கலந்துகொள்கிறார்.

## வலிகாமம் கல்விவலய கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய கரப்பந்தாட்ட இறுதிப்போட்டிகள் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் தலைமையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் 15 வயதுப் பிரிவில் முதலாவது இடத்திற்கான போட்டியில் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இணுவில் மத்திய கல்லூரியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

17 வயதுப் பிரிவில் - முதலாம் இடத்திற்காக இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய மகாவித்தியாலயமும் மூன்றாம் இடத்திற்காக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

19 வயதுப் பிரிவில் - முதலாவது இடத்திற்காக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும், மூன்றாம் இடத்திற்காக இணுவில் மத்திய கல்லூரியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன என வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் தெரிவித்தார்.

## இலங்கை - அவுஸ்ரேலியா அணிகளின் டெஸ்ட் போட்டிகள் இன்று காலியில் ஆரம்பம்!

பொண்டிங் தலைமையிலான அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான ஒரு நாள் தொடரை அவுஸ்திரேலியா 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது. அவுஸ்ரேலிய - இலங்கை அணிகள் இடையே நடைபெறவுள்ள 3 டெஸ்ட் போட்டித் தொடரின் முதலாவது போட்டி காலியில் இன்று நடைபெறவுள்ளது.

ஒரு நாள் தொடரை இழந்த இலங்கை அணிக்கு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. ஓர் ஆண்டு தடைக்குப் பின்னர் ஷேன வோர்ன முதன்முறையாகப் பங்கேற்கும் சர்வதேச போட்டி இதுவாகும். அவருக்கும் சுழல்பந்து வீச்சாளர் முரளீதரனுக்கும் இடையே கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டெஸ்ட் போட்டிகளில் வோர்ன் 491 விக்கெட்டுக்களையும் முரளீதரன் 485 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ இந்த டெஸ்டில் பங்கேற்பது சந்தேகமே.

இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு -

அவுஸ்ரேலியா - பொண்டிங் (கப்டன்), கில் கிறிஸ்ட், லாங்கர், ஹைடன், லீமன், சைமன்ட்ஸ், மார்ட்டீன், காடிச், மெக்ஹில், வாடே ஸ்கோம்ப், காஸ்பரோவிஸ், பிரட் வில்லியம்ஸ், கிலஸ்பி, வோான், பிரட் லீ.

இலங்கை - திலகரத்ன (கப்டன்), அத்தப்பத்து, ஜெயசூரிய, சங்ககார, ஜெயவர்த்தன, தில்சான் சமரவீர, திலகரத்ன தில்சான், குணவர்த்தன, சமிந்தவாஸ், சொய்சா, முரளீதரன், தர்மசேன, உபுல் சந்தன, கவுசல் லொக்கு ஆராய்ச்சி.

## ஐ.சி.சி கிரிக்கெட் போட்டி இந்தியாவுக்கு மாற்றப்படலாம்!

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வரும் ஐ.சி.சி. சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியில் 1998 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவும், 2000 ஆம் ஆண்டு நியூசிலாந்தும் சம்பியன்பட்டம் பெற்றன. 2002 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த போட்டியில் இந்தியாவும், இலங்கையும் இணைந்து கோப்பையைக் கைப்பற்றின.

இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி சம்பியன் போட்டி செம்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெறுகிறது. இதில் 12 நாடுகள் பங்கேற்கின்றன. இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பிரிவில் உள்ளன.

ஐ.சி.சி சம்பியன் போட்டி திட்டமிட்டபடி இங்கிலாந்தில் நடைபெறுமா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது,

இங்கிலாந்து அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாட திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சிம்பாப்வே பயணத்தை புறக்கணிக்க இங்கிலாந்து முடிவு செய்துள்ளது. இங்கிலாந்து பயணத்தை ரத்துச்செய்தால் அந்த நாட்டில் நடைபெறும் ஐ.சி.சி போட்டியில் தாங்கள் கலந்துகொள்ளமாட்டோம் என்று சிம்பாப்வே அறிவித்துள்ளது.

இதனால், இங்கிலாந்துக்கு பதிலாக வேறு ஒரு நாட்டில் இந்தப் போட்டியை நடத்தலாம் என்று தெரிகிறது. இங்கிலாந்தில் ஐ.சி.சி. போட்டி நடைபெறாவிட்டால் இந்தியாவுக்கு மாற்றம் செய்யப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நியூசிலாந்தில் உள்ள ஒக்லாந்து நகரில் நடைபெறும் ஐ.சி.சி கூட்டத்தில் இதுகுறித்து முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

## இந்திய மத்திய அமைச்சர் ஜனதாதளத்தில் இணைவு!



(பெங்களூர்)

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் தொகுதியில் சமதா கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சீனிவாஸ் பிரசாத்திற்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. சமீபத்தில் சமதா கட்சி, ஐக்கிய ஜனதா கட்சியுடன் இணைக்கப்பட்டது.

ஆனால் மத்திய அமைச்சர் சீனிவாஸ், தனது ஆதரவாளர்களுடன் தொடர்ந்து சமதா கட்சியில் நீடிப்பதாகக் கூறிவந்தார். இதனால் சமதா கட்சி தலைவராக இருந்த மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸுடன் அவருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இந்த நிலையில் மத்திய அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் அமைச்சர் பதவியை திடீரென இராஜினாச் செய்தார். இராஜினாமாக் கடிதத்தை பக்ஸ் மூலம் பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பினார்.

பின்னர் அவர் தனது ஆதரவாளர்களுடன் முன்னாள் பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஜனதாதளம் கட்சியில் இணைந்துவிட்டார்.

# பாரதீய ஜனதா கூட்டணிக்கு 290 இடங்கள் கிடைக்கும்!

## 'அவுட்லுக்' கருத்துக்கணிப்பு கூறுகிறது

நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா கூட்டணிக்கு 290 இடங்களும், காங்கிரஸ் கூட்டணிக்கு 169 இடங்களும் கிடைக்குமென கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

543 இடங்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல், மே மாதங்களில் நான்கு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் முடிவு எப்படியிருக்கும் என்பது குறித்து அவுட் லுக் பத்திரிகை கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியது.

17 மாநிலங்களில் உள்ள 102 நாடாளுமன்றத தொகுதிகளில் 612 கிராமங்கள் மற்றும் 392 நகரங்களில் இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. மொத்தம் 12 ஆயிரத்து 249 பேரிடமிருந்து கருத்துக் கேட்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

இதில் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றி வெற்றிபெறும் எனத் தெரியவந்துள்ளது.

கருத்துக்கணிப்பில் வெளியான விவரங்கள் வருமாறு -

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 280 முதல் 290 இடங்கள் வரை கிடைக்கும் இதில் பாரதீய ஜனதாவுக்கு மட்டும் 195 இடங்கள் கிடைக்கும்.

பாரதீய ஜனதா கூட்டணி கட்சிகளுக்கு 90 இடங்கள்வரை கிடைக்கும். இது கடந்த தேர்தலில் பாரதீய ஜனதா கூட்டணிகளுக்கு கிடைத்ததைவிட 8 இடங்கள் குறைவாகும்.

காங்கிரஸ் கூட்டணிக்கு 159 முதல் 169 இடங்கள் கிடைக்கும் என தெரியவந்துள்ளது. இதில் காங்கிரஸுக்கு மட்டும் கிடைக்கும் இடங்கள் 103 ஆகும். கடந்த தேர்தலில் காங்கிரஸ் 114 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது.

காங்கிரஸின் கூட்டணி கட்சிகளுக்கு 40 முதல் 61 வரையான இடங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இது கடந்த தேர்தலில் பெற்ற இடங்களை விட அதிகமாகும். இந்த இரண்டு கூட்டணிகளிலும் இடம்பெறாத பிற கட்சிகளுக்கு 89 முதல் 99 இடங்கள் கிடைக்கும்.

பிரதமர் வாஜ்பாயின் செல்வாக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றிக்கு பெரிதும் உதவியாக இருக்குமென்று தெரியவந்துள்ளது.

கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களில் 62 சதவீதமானோர் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படவேண்டுமென்றும் 58 சதவீதமானோர் வாஜ்பாயே மீண்டும் பிரதமராக வரவேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு 26 சதவீதமானோரின் ஆதரவும், துணைப் பிரதமர் அத்வானி, பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதி ஆகியோருக்கு 2 சதவீதமானோரின் ஆதரவும் உள்ளது.

சோனியாவைத் தவிர வேறு யாரை பிரதமர் பதவிக்கு முன்னிறுத்தினாலும், காங்கிரஸ் கட்சியின் வெற்றிவாய்ப்பு பெரிதும் பாதிக்கப்படும் என்று 40 சதவீதமானோர் கருத்துத் தெரிவித்துளளனர். ஆனால் 38 சதவீதமானோர் காங்கிரஸின் வெற்றிவாய்ப்பு அதிகரிக்குமெனக் கூறியுள்ளனர்.

கடந்த தேர்தலை விட இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கூடுதல் இடங்களில் வெற்றி பெறாவிட்டால் கட்சித் தலைவர் பதவியைவிட்டு சோனியா விலகவேண்டும் என்று 43 சதவீதமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## மானிப்பாய் மருதடி ஆலய

# வயற்காணியின் ஒரு பகுதியில் விவசாயத்துக்கான குளம் அமையும்

## புரிந்துணர்வுக் கூட்டத்தில் தீர்மானம்


கடந்த மூன்று வருடங்களாக இழுபறியில் காணப்பட்ட மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு முன் பாகவுள்ள குளம் (கேணி) சம்பந் தமான பிரச்சினைக்குச் சுமுகமாகத் தீர்வு காணப்பட்டது.

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற புரிந்துணர்வுக் கூட்டத்திற்கு - வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோரும், பிணக்கில் சம்பந்தப்பட்டவர்களான - மருதடி விநாயகர் ஆலய தர்மகத்தா சபைத் தலைவர், செயலாளர், உறுப்பினர்களும், மானிப்பாய் விவசாயிகள் சம்மேளன தலைவர், செயலாளர், விவசாயிகளும் கலந்துகொண்டனர்.

கோயில் புனருத்தாரண பணிகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதால், அருகிலுள்ள கேணி அதற்கு இடைஞ்சலாக உள்ளதாகக் கோயில் நிர்வாகத்தினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், விவசாயிகள் தரப்பில் குளம் தமது விவசாய நடவடிக்கைகளுக்கு மிகவும் அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து நடைபெற்ற நீண்ட விவாதத்தின் பின்னர், ஆலய புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டக்கூடாது என்று- சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கிணங்க, இரு பகுதியினரும் பின்வரும் தீர்மானத்திற்கு இணங்கிக்கொண்டனர்.

ஆலயத்திற்குச் சொந்தமாக உள்ள வயல்காணியின் ஒரு பகுதியை ஆலய நிர்வாகசபை ஒப்புதலோடு குளம் வெட்ட அனுமதிப்பது எனவும், விவசாய தேவைகேற்றவாறு வாய்க்கால் அமைத்து, மண் அணை கட்டுவதாகவும், கோயிலிருந்து அப்புறப்படுத்தும் கற்கள், மண் கொண்டு குளம் நிரப்பபுவதெனவும், குறிப்பிட்ட காலஎல்லைக்குள் புதிய இடத்தில் விவசாயக் குளம் அமைப்பதாகவும் இரு பகுதியினரும் சுமுகமாக இணங்கிக்கொண்டனர். (101)



தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் அங்கத்தவர்களுடனான சந்திப்பில் - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# அகிம்சை வழிப் போராட்டம் தோற்றதாலேதான் ஆயுதவழிப் போராட்டத்தை முன்னெடுத்தோம்

## யாழ். அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் தமிழீழத்தில் அகிம்சைவழிப் போராட்டம் - சிங்களத்தலைமைகள் முன் தோறறுப்போனதாலே, ஆயுத முனையிலான போராட்டத்தை முன் எடுத்தார் என யாழ்.மாவட்ட அரசியற் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களின் உரிமைகளைச் சிங்களதேசம் வழங்க முன்வரவேண்டும். தமிழர்களின் உரிமை வழங்கப்படாமல், தமிழர்கள் பாதிக்கப்படும்நிலை வருமானால், சிங்களதேசம் கடும்பாதிப்புக்களை எதர்நோக்க நேரிடும்.



படைபலம், அரசியல்ரீதியாக எமது பலம் அதிகரித்த நிலையில் தான் போரநிறுத்த ஒப்பந்ததைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

ஒரு விடுதலைப் போராட்டத்திற்குச் சர்வதேச ஆதரவும், அங்கீகாரமும் தேவை. படைபலம்கொண்ட ஒரு விடுதலை இயக்கத்துக்கு - சரவதேச ஆதரவு இருக்கும் என்று இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டில் கடந்த ஆண்டு மட்டும் 190 கொலை, கொள்ளைச் சம்பவங்கள்

யாழ்.குடாநாட்டில் சென்ற வரு டம் 190 இற்கு மேற்பட்ட பார தூரமான கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் பதிவுகள் தெரிவிக்கின்றன.

2002 ஆம் ஆண்டைவிட 2003 ஆம் ஆண்டு கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், இநத சம்பவங்களுடன் தொடர்புடைய பெரும்பான்மையான குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட சட்டவிரோதமான மதுபான உற்பத்தி தொடர்பாக 808 பேர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சிறுகுற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவில் சிறுகுற்றம் தொடர்பான 342 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. காணித் தகறாறுகள் தொடர்பாக 300 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

இதைவிட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் சென்ற வருடம் 62 விபத்துகள் இடம்பெற்று, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு - விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அரியாலைப்பகுதியில் - நாளை காலை 8.30 மணிக்கு நாயன்மார்க் கட்டு சனசமூகநிலையத்திலும், 11 மணிக்கு சித்த ம.ம நிலையத்திலும், 2 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும்,

11 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பெந்தெகொஸ்தே தேவாலயத்திலும், 11 மணிக்கு சென். பெனடிக்ற் வித்தியாலயத்திலும், 2 மணிக்கு முத்தமிழ் பாலர் பாடசாலையிலும்,

பெரியகடை மற்றும் நாவாந்துறைப்பகுதியில் - 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சன்மார்க்க சனசமூக நிலையத்திலும், 11 மணிக்கு கொட்டடி சனசமூக நிலையத்திலும், 2 மணிக்கு மிருகவைத்திய நிலையத்திலும்,

17 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அண்ணா சனசமூகநிலையத்திலும், 11 மணிக்கு சென்நீக்லஸ் சனசமூகநிலையத்திலும், 2 மணிக்கு அறிவொளி சனசமூகநிலையத்திலும்

18 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பேதுரு பாலர் பாடசாலையிலும் 11 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும், 2 மணிக்கு ஓ.எல்.ஆர் அருகாமையிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கான - விசர் நோயத்தடுப்பூசி மருநதை ஏற்றிக்கொள்ளுமாறு மாநகரசபை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

# தாய் தந்தையற்ற மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்க ஏற்பாடு

## தியாகு அறப்பணி நிதியம் முன்வந்தது

ஊற்று நிறுவனம் எடுத்தமுயற்சியின் பயனாக - தாய், தந்தையற்ற அநாதைப் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசிலாக உதவிப்பணம் வழங்குவதற்கு தியாகு அறப்பணி நிறுவனம் முன்வந்துள்ளது. இதன்படி, வடமராட்சி வலயத்திலிருந்து புலமைப்பரிசில் பெறத் தகுதியுடைய பிள்ளைகளின் விபரங்களை ஊற்று நிறுவனம் சேகரித்து வருகிறது.

தகுதியான மாணவர்களுக்கு - தியாகு அறப்பணி நிதியம் மாதாந்தம் 200 ரூபா வழங்கும். அத்துடன், விதவைகள் 50 பேருக்கும் இதேமாதிரி மாதாந்தம் 200 ரூபாவை வழங்கவிருக்கிறது. விதவைகளுக்கான உதவு தொகையை மேலும் 50 ரூபாவால் அதிகரிக்க இந்த நிதியம் முயற்சி எடுத்துவருகிறது.

இந்த விபரத்தை அண்மையில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஊற்று நிறுவனப் பிரதிநிதி தெரிவித்தார். (13)

# சின்னஞ்சிறு செய்திகள்

### நூலக அபிவிருத்தி ஆலோசனைக்குழு அமைப்பு

வலி.தெற்கு பிரதேசசபையின் கீழ் செயற்படும் - சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களில் 11 பேர் கொண்ட நூலக அபிவிருத்தி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், வாசகர் வட்டம் ஒன்றை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. (101)

### மகளிர் தினவிழா

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு - இளவாலை திருமறைக் கலாமன்ற மகளிர் அவையினர் நடத்தும் மகளிர் தினவிழா - இன்று மாலை 5 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சத்தி வாணி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி அதிபர் திருமதி கி.சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (41)

### சாவகச்சேரியில் படையினரின் புதிய முகாம் அமைப்பு

சாவகச்சேரி தபால்நிலைய வீதியிலும், பெருங்குளஞ் சந்தியிலும், நுணாவில் - கனகன்புளியடி வீதியிலும், மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகிலும் - படையினரால் சிறியளவிலான முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெருங்குளஞ் சந்தியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான இருமாடிக் கட்டத்தில் நிலைகொண்டுள்ள படையினர், சுற்றப்புறமுள்ள பற்றைகளை வெட்டி அகற்றி வருகின்றனர்.

இதேபோல, மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் தற்காலிகக் கொட்டகை ஒன்றை அமைத்துத் தங்கியுள்ள படையினர் - ஓலைகளினாலான மறைப்பு வேலி யொன்றையும் அமைத்துள்ளனர். (24)

### மனைப்பொருளியல் பொருட்காட்சி

சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு நடாத்தும் - மனைப்பொருளியில் பொருட்காட்சி இன்று காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இணுவில் மஞ்சத்தடியிலுள்ள கோணடாவில் வடமேற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (44)

### பெயர்ப்பலகை அமைப்பு

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்குப் புதிதாகப் பெயர்ப்பலகை அமைக்கப்பட்டு வருகின்றது.

கல்லூரியின் பழைய மாணவனும், பழைய மாணவர் சங்க செயலாளருமாகிய மகாதேவன் - சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் அன்பளிப்பாக அமைத்துக் கொடுத்துள்ளார். இதன் திரைநீக்கம் - விளையாட்டுப்போட்டியன்று இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.(101)

### பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து மேற்கொள்ளும் சிறுவர் நலத்திட்டத்தின்கீழ், பாடசாலை இடைவிலகிய 30 மாணவர்களுக்கு, அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்கும் பொருட்டு - கடந்த வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் துன்னாலைப் பிரதேசத்தில், யாழ்பாணத்தின் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் தலைமையில், கிராம சேவையாளர் அனுசரணையுடன் சிறுவர் நலத்திட்டப் பணியாளர்களால் பாடசாலை உபகரணங்கள் பெற்றோர்கள் முன்னிலையில் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டது.

# மஹோற்சவ கால ஆலோசனைக் கூட்டம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும், அக்காலப்பகுதிக்குத் தேவையான நிர்வாக, மருத்துவ, போக்குவரத்து, குடிநீர், சுகாதரம் மற்றும் பாதுகாப்பு எனபன வழங்குவது தொடர்பாகவும், முன்நிகழ்ச்சி திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்காக ஆலோசனைக் கூட்டமொன்று - எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 3 மணிக்கு இந்த ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆலய நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். ஆலய மஹோற்சவம் - எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து ஏப்பிரல் 14 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(44)

### மகளிர் தினவிழா

அரியாலை அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் சர்வதேச மகளிர் தினவிழா - இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தின் சங்கத் தலைவர் ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.




பெயர் : ச.ஆரோன்
முகவரி : பழமூர், இத்தாலி.




# எண்ணுவதெல்லாம்...



அன்புடன் நண்பர் அவைமணிக்கு எழுதுவது-

"ஜுன் மாதம் வந்துவிடுவேன்" என்று சென்ற கடிதத்தில் தெரிவித்திருந்தீர், எக்சிற் விசாவுக்கு விண்ணப்பம் தை மாசம் கொடுத்தாயிற்று. மூன்று மாதத்தில் தருவார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தீர். என்ன சுணக்கம்? கொடுக்க வேண்டியதை கொடுக்கவேண்டிய இடத்தில் கொடுத்தால் எல்லாம் விரைவாய் முடியும் என்பது பரமரகசியமல்ல. அந்த நாட்டின் கலாசாரத்துடன் ஒட்டிக்கொண்ட காரியம் அது என்றும் சொல்லப்படுகின்றதே.

என்ன முணுமுணுக்கின்றீர்? வெட்டாத குளத்துக்கும் தூர்க்காத வாய்க்காலுக்கும் ஒப்பந்தக் கொடுப்பனவு அனுமதிக்கும் மேலாளர்கள் அங்கே அதிகாரத்தில் இருப்பது இரகசியமல்லவே.

"மகனும் மருமகளும் குழந்தைகளும் இலண்டனிலிருந்து வருவார்கள், வந்து திரும்பிய பின் நான் வருவேன் என்று எழுதினீர். வந்தார்கள், அப்பா அம்மாவைப் பார்த்துவிட்டு திரும்பிவிட்டார்கள் என்றால் வேறென்ன தடை?

இன்னும் அனுமதி அங்கே பூரணமாகத் திரும்பவில்லை போகவேண்டாம் என்று யாரும் சொன்னார்களா? அப்படித்தான் என்றால் என் பேச்சை நீர் நம்பவில்லை என்று அர்த்தம். நான் நாட்டு நிலமை பற்றி சரியாக தெளிவாகத்தான் எழுதினேன். நீர் வேறுயார் சொல்லை நம்பினீரோ! "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காணும் வரை" அங்கேயே இருக்கப் போகின்றீரா?

பதினாறு ஆண்டுகள்வரை இருந்து வாழ்ந்த, அமைதியாக வாழவைத்த விமானக்குண்டுகளுக்கும் ஷெல்லடிகளுக்கும் தப்பி உயிர்வாழ அடைக்கலம் தந்த அயல் நாட்டு மண்ணை விட்டுப்பிரிந்து வருவது - மனதை வாட்டும் காரியம் தான. தொலைபேசி, தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி, வானொலி, ஒலிநாடா சாதனங்கள், குழாயில் வந்து வீட்டு வாசலில் விழும் காவேரி நீர், போன் பண்ணினால் வீட்டுப்படலைக்கு வரும் ஆட்டோ, டக்சி - அடேயப்பா அந்த வசதிகள்? அவைதான் மனிதனின் குறிக்கோளா? எங்கள் நாட்டில் செலவிட வேண்டிய பணம் அந்நிய மண்ணில் செலவாகின்றதே என்று கவலைப்பட சந்தர்ப்பம் இல்லாத நிர்ப்பந்தம். ம்ம்ம்... என்ன செய்யலாம்? எல்லாம் அந்த சிங்கத்தின் வாரிசுகள், அவர்களின் வரலாற்றுப்படிதான் செய்த சூழ்ச்சி, திட்டமிட்ட இன ஒதுக்கல் நடவடிக்கையின் விளைவு.

உம்மை மட்டும் நான் குறைசொல்வது தவறு. எனக்குத் தெரியும் - அங்கே .எம்மவர் பலரும் பணத்தை அள்ளி எறிந்து மகிழ்ச்சியைத் தேடுகின்றார்கள். நீராவது இத்தனை ஆண்டுகள் வாடகை வீட்டில் வாழ்ந்தீர். வீடு விலைக்கு வாங்க| அல்லது நிலம் வாங்கி அங்கே வீடுகட்டிக் குடியிருப்பவர்களும 'அகதிகள்' தான். அதுமட்டுமா அதிர்ச்சி. கோயில் கட்டுகின்றார்கள். பிள்ளைகள் அனுப்பும் பணத்தை எப்படி செலவிட்டுத் தீர்ப்பது என்று தெரிந்தவர்கள்போலும். கொட்டில் பிள்ளையாருக்கு கற்கோவிலும், கோபுரமும், வீதிச்சுவரும் கட்டிக்கொடுக்கின்றார்கள் எம்மவர் என்று அறிந்தேன். தாய் பிச்சை எடுக்க மகன் கும்பகோணம் தரிசிக்கப் போனானாம் என்பது போல, இங்கே எங்கள் கோயில்கள் போரின் பெயரால் அழிந்து கற்குவியல்களாய் கிடக்க, அங்கே தெருவுக்குப் பத்துக்கோயில்கள் போதாதென்றா, புதுக்கோயில் கட்டிப் புகழ் தேடுகின்றார்கள்?

நான் கேள்விப்பட்டேன் ஒரு முருகன் கோயிலுக்கு நவக்கிரக மண்டபம், தன் செலவில் செய்வித்து, தன் பெயர் முகவரியையும் பளிங்குப் பலகையில் பொறித்துவைத்த ஒருவர் - சிலநாளில் கனடாவில் இருக்கும் தன் மகனிடம் போய்விட்டாரம் அதன்பின் நவக்கிரக மண்டபத்துக்கு மேலும் மெருகூட்டியவர்கள், அவருடைய பெயர் பொறித்த பலகைக்கு மேலால் சீமெந்பூசி மறைத்து விட்டனராம். நீர் இருக்கும் திருச்சியில் ஒரு புறநகரில் தான் அது நடந்தது. நன்றியுள்ள மாந்தரடா... யாரோ பாடினானே!

என்ன நோக்கம்! 'சொந்த மண்ணில் கோயில்களைத் திருத்திக்கட்டி, என்னபயன்! இனி சண்டைவராதா?' என்று கேட்பார்களோ அவர்கள்?

'பேச்சுவார்த்தை முடியட்டும் முழுமையான வழமை திரும்பட்டும். போகலாம் என்று பலரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்களாமே? இங்கேயும் தான் அப்படியொருசாராரின் கவலை. இந்தப் பேச்சுவார்த்தை எப்போ முடியும்? எங்கள் ஊரை விட்டு 'இவன்கள்' எப்போ போவான்கள்? நாங்கள் பயமின்றி நடமாடுவது எப்போ? என்று கேட்கிறார்கள்.

நான் சொல்லித்தான் நீர் தெரிந்துகொள்ளவேண்டிய அரசியல் அல்ல. என்றாலும் இங்கே ஒரு சிறப்பு இருக்கின்றது. சலுகைகள், பதவிகள், வாக்குறுதிகளுக்கு விலை போகும் 'பேச்சாளர்கள்' அல்ல அரசியலுக்குப் புதியவர்கள் ஆனாலும், புத்திக்கூர்மை படைத்தவர்கள்தான் இன்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள். முன்னாளில் தோற்றுப்போன - இல்லை, ஏமாற்றப்பட்டவர்கள் இன்று அரங்கில் இல்லை. அதிசயமாக, ஒரு புதிய அணுகுமுறையைப் பார்க்கமுடிகிறது. இதை நீர் புரிந்து கொள்ளவேண்டும். எங்கள் அழிந்த தாயகத்தின் மீது சர்வதேச கவனத்தைக் கவர்ந்திழுத்து, அவர்களின் நியாய உணர்வுகளைத் தூண்டிவிடும் முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. சர்வதேச சமுதாயத்தின் கேள்விகளுக்கு ஆளும் வர்க்கம் பதில்சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வரும் வரும்.

நீர் வாரும், வந்திருந்து கவனித்தால்தான் மண்ணும், அரசியலும் எப்படி இருக்கின்றதென்பது புரியும். ஒட்டுமொத்த சிங்கள சமுதாயத்தினதும் நீதியான பார்வை, எங்கள் பால் திரும்பும் நாளும் வரும். அதற்கான அரிய, உரிய பரப்புரை நடந்து கொண்டிருக்கின்றது! உடனடியாக முழுத்தீர்வு வந்துவிடும் சாத்தியமில்லை. நாளாகலாம். எங்கள் விடுதலைக்காக நாங்கள் கொடுத்தவிலை என்னவென்று நண்பருக்குத் தெரியும். எல்லாம் இழந்தோம். இனி இழப்பதற்கு ஏதும் இல்லை. அவர்கள் தருவதை ஏற்றுககொள்வோம் என்று இங்கு யாரும் சொல்லத் தயாராயில்லை. இச்சந்தர்ப்பத்தில் என் மனதில் எழும் ஆசையையும் எழுதுகிறேன். அந்நாளில், தனித்தனிக் குழுக்களாக நின்று ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்கள், அவர்களின் இலக்கும் தமிழின விடுதலைதானே. அது சரியெனில், எல்லாம் இழந்து ஒட்டாண்டியாய் நிற்கும் இன்றைய சூழலில் அவர்கள் ஒரே பாதைக்கு வந்து தமிழன் பலத்தை எதிரிக்கு காட்ட முனைந்தால் எவ்வளவு பயனுறுதியான தீர்வை எட்டமுடியும் என்று எண்ணுகையில், மனம் பூரிக்கின்றது. இது சாத்தியமான கற்பனைதானா நண்பரே! தமிழன் தலைவிதி!

வெளிக்கிட்டு வாரும் வீட்டுப் பாவனைப் பொருட்களை அரைகுறை விலைக்கு விற்று விட்டு அல்லது கப்பலில் அனுப்பிவிட்டு வருவது, இரண்டில் உன்றையே செய்யமுடியும், கப்பலில் அனுப்புவதென்றால் அவற்றைப் பொதிகட்டுவதிலிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டு சென்று, எக்ஸ்போட் முகவரிடம் ஒப்படைப்பதுவரை, தனியே உம்மால் செய்யமுடியாது? ஓ, ஞாபகம் வருகிறது. புத்தகமெல்லாம் கனக்க வாங்கிவைத்திருப்பதாக, போனமாசம் அங்கே சுற்றுலா வந்து திரும்பிய ஞானம் சொன்னார். அப்ப அவற்றையும் சேர்த்து அனுப்ப ஒரு தனிக் கப்பலை, இல்லையில்லை, ஒரு கொன்ரெயினரை ஏற்பாடு செய்யலாமே எது வசதியோ செய்து முடித்துக்கொண்டு விரைவாய் வந்து சேரப்பாரும்.

நீர் வருவீர், வந்திருப்பீர் என்றெண்ணி, உங்கள் வீட்டுப் பக்கம் போய்ப்பார்த்தேன். அயல் வீடுகள் பலவும் உடைந்து கிடக்க,உங்கள் வீடு மட்டும் நன்றாக இருப்பது அதிசயம். ஒரு பக்கம் மட்டும் கொஞ்சம், ஒரு ஷெல்துண்டு துளைத்திருப்பது போலுள்ளது. உண்மையில் ஓடுகளைக் கள்வர் கழட்டிக் கொண்டு போயினர் என்றும், நான் திருத்தி, ஓடுகளும் வாங்கிப் போட்டுக்கொண்டு இருக்கின்றேன் என்று உம்முடைய மச்சான் சொன்னார். 'ஆவணிக்கு வருவேன்' என்று எழுதினார், வரவில்லை என்றார்.

அன்று நல்லூர் திருவிழா தங்கரதத்தில் முருகன் வீதிவலம் வந்து கொண்டிருந்தான். மேற்கு வீதியில் சிறிது நேரம் நின்று பார்த்தேன். நல்லூர் திருவிழாக்காலம் வழக்கம்போல் களியாட்ட விழா என்று சொன்னால் ஒப்புக்கொள்வீரா? மக்கள் வெள்ளம் வீதிகளில் மட்டும் நிறைந்திருக்கவில்லை. இனிப்புக்கடை, கடலைக்கடை, காப்புக்கடை, குளிர்க்களிக்கடை, பொம்மைக் கடை இவைதவிர தென்மேற்கு வீதி சார்ந்த புற்றரைப் பரப்பில் ஒரு வேர்ல்ட் மாக்கற், ஒரேதிடலில் அனைத்து பொருள்களும் லாபாய் லாபாய்... எதை எடுத்தாலும் ரூபா அறுபது இதெல்லாம் போருக்குப் பின் புதுமை, ஏதோ கூடாத கிரகமாம் அதற்குப் பரிகாரமாம் தெற்கு வீதியில் பிரமாண்டமான புகை மண்டலம், கற்பூரக் குவியல், தீச்சுவாலை. பக்த கோடிகள் சாரிசாரியாக அரசசார்பற்ற வெளிநாட்டு உதவி நிறுவனங்களைச் சேர்ந்த வெள்ளைத்தோல் மனுசரும், மனுசிகளும் அங்காங்கே புதுமை பார்த்து நிற்கின்றனர்.

தூரமேற்கு நாடுகளில் வேலைசெய்யும் எம்நாட்டு 'அகதிகள்' வந்திருந்தனர். விழாவுக்கு அழகு சேர்க்கப் பட்டுவேட்டி, சேட், சால்வையுடன், சப்பாத்தும் அணிந்து, காட்சி தரும் ஆடவரின் கைப்பற்றியபடி, புதினம் பார்த்துச் செல்லும் துணைவியர். அவர் பெண்ணா? இவள் ஆணா, என வியப்புறும் வகையில் தலைமுடி வளர்த்துச்சீவி ஆண். கால் நீளக்களிசான் அணிந்த பெண்.

திரும்பும் வழியில், வைமன் தெருவில், அந்நாளில் நீர் பணியாற்றிய பேப்பர் கம்பனி இருந்த மாடிக்கட்டடம் - உடைந்த நிலையில் மூடிக்கிடப்பதைப் பார்த்தேன். அன்றிருந்த காலகலப்பையும் இன்றைய இருள் அமைதியையும் ஒப்பிட்டு வருந்தினேன். இது ஒன்றும் அதிசயமில்லையே. உடைவு, சிதைவு, வெடிப்பு, அழிப்பு, இல்லாத கட்டடம் ஒன்று இருக்குமென்றால், அது நோமல் பரிசுக்குரியது என்பேன்.

இந்த அழிவுகளைப் புனரமைக்கவென்றே ஜப்பான் நாட்டின் நிதியுதவி மாநாட்டில் பணம் கொடுக்க செல்வந்த நாடுகள் ஒப்புக்கொண்டன.

அந்தப் பணத்தில் எந்தப் பகுதியாவது தமிழ்மண் மேம்பாட்டுக்குச் செலவிடும் அறிகுறி இதுவரை இல்லை. இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பி வரும்போது, சிதைந்த வீடுகளைத் திருத்த ஆரம்பச் செலவாக இருபத்தையாயிரம் ரூபா கொடுக்கும் திட்டம் நடைமுறையில் இருந்தாலும் பலருக்கு அந்த 25 இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் நான் ஏன் வாடகை வீட்டில் இருக்கவேண்டும்.

என்னைக் கேட்டால் எனக்கு எந்தப் பிச்சைக்காசும் வேண்டாம். நீங்கள் குண்டு பொழிந்து அழித்த என்னுடைய உறைவடத்தைத் திருத்திக்கட்டி முன்பிருந்த வடிவத்தில் என்னிடம் ஒப்படையுங்கள் என்பேன். வீட்டின் பின்புறத் தோட்டத்தில் நின்ற தென்னைகளும் ஷெல் அடியால் முறித்து வீழ்த்தப்பட்டிருந்தன. அதற்கு என்ன பரிகாரம்? வன்னியிலிருந்து திரும்பி வந்து பார்த்தபோது, என் வீடு இருந்த அழகை சற்றுக்கேளும் வேலிகள் இல்லை பதிலாக பற்றைகள், வெளிப்படலை இல்லை, முற்றத்தில் நின்ற நிழல் மரங்கள் பூக்கள் இல்லை. கூரை ஓடுகள் மரங்கள் இல்லை, வெடித்துப் பாட்டத்தில் கிடக்கும் சுவர்கள், உடைசல்களிடையே வளர்த்துவிட்ட செடிகொடிகள். அவற்றில் அழகான பூக்கள், தரையில் குழிகள், வெடிப்புக்கள் அவற்றிலிருந்து வளர்ந்திருக்கும் வேப்பமரக் கன்றுகள் எனக்கு வியப்பாக மகிழ்ச்சியூட்டிய காட்சி ஒன்று, குசினி நடுவில் புசுமைத்தளிர்களுடன் வளர்ந்து நிற்கும் வேப்பமரக் கன்று ஒன்று அதை வெட்டக்கூடாது என்று மனதிற்குள் முடிவு செய்தேன்.

இப்போது நான் இருக்கும் இச் சிறுவீடு - நல்ல காற்றோட்டமுள்ள சூழலில் இருப்பதால் சற்றே மனநிறைவு. பின்புறத்தில் இரண்டு பெரிய வேப்பமரங்கள். மூன்று பனை, இலுப்பை, மணக்கும் முல்லை, இதன் இலை சமைத்துண்ணலாம். முற்றத்துக்கு வரும் பாதையில் ஒரு விளாத்திமரம் - தினம் இரண்டு பழமாவது விழும், எனக்குப் பிடித்தபழம், ருசியுள்ளபழம். தெருப்படலை அருகில் ஒரு கொய்யா, பழுக்கும் காலம். எனக்கு மட்டுமல்ல கிளி, அணில்களுக்கும் கொண்டாட்டம்.

## எஸ்.பி.கிருஷ்ணன்

இவ்வீட்டில் குடிவந்த ஒரு மாதத்தின் பின், ஒரு மழை வந்தது அதுவும் செய்தியா என்கிறீரா? இல்லை மறக்க முடியாத அனுபவம் இரவு மணி10.30. முதலில் இடி முழக்கம் பின்னர் காற்று குளிர், அடுத்து வந்தது மழை. மழை என்றால் மேலிருந்து கீழே வருவதுதான் பெரும்பாலும் வழக்கம், அன்று காற்றுடன் சேர்ந்து வெள்ளம் கொட்டிற்று மழை கொட்டக்கொடட முழக்கம் நடந்தது. அந்நாளில் அடுத்தடுத்து விழும் ஷெல் அடிகளைக் கேட்டிருப்பீரே - அதேபோன்ற சத்தம்.

சிறுவீடுதானே அதனுடன் சேர்ந்து ஒரு கிடுகுப்பத்திகட்டி ஒரு மேசையும் கதிரையும், அங்கே வைத்திருந்தேன் என் பாவனைக்காக. அன்று பெய்த புயல்மழையால் அந்தப் பத்தி ஒரு பக்கம் அறுந்து விழுந்து என்மேசையில் வைத்திருந்த புத்தகங்கள், பேப்பர்கள் ஒரு நொடியில் நனைந்துபோயின. எடுக்கப்போன என்தலை நனைந்து, கால்கள் வெள்ளச் சேற்றில் வழுக்கிவிழப்போய் சுவர்தடுப்பில் பிடித்துத் தப்பி எழுந்து, வீட்டினுள் ஏறினேன். ஏறினால் அங்கேயும் வெள்ளம் சுவருடன் ஒட்டியபடி ஒரு மணிநேரம் நின்றிருந்தேன். பிள்ளைகள் அறைக்குள்ளே படுத்திருந்தனர். நித்திரையின்றி இடி முழக்கத்துக்குப் பயந்து தாயுடன் ஒட்டிக்கொண்டிருந்தனர்.

ஒருவாறாய் மழை ஓய்ந்தது - ஓய்ததா? இல்லை. வடக்கு நோக்கிப் போயிற்று, வடக்கே மின்னல் தெரிந்தது. முழக்கம் கேட்டது. இங்கே மழை வெளித்தது. கூட்டித்துடைத்துவிட்டுப் பாயைப் போட்டேன். வேறென்ன செய்யலாம்? வேறு வீடு கிடைக்கவில்லையா என்று கேட்பீர், நீர் வந்து பார்த்தாலே நிலமை புரியும். உம்மை அச்சுறுத்தவில்லை. உமக்குத்தான் சொந்த வீடு சிதையாமல் இருக்கே என்ன இருந்தாலும் எங்கள் மண், எங்கள் மழை, காற்று, இடி, முழக்கம், வானம் - சுதந்திரமாக அனுபவிக்கிறோம்.

வெளிக்கிட்டு வாரும், வந்துபாரும், நாடு கண்டிருக்கும் மாற்றத்தை. யாழ்ப்பாண மக்கள் வெள்ளத்தில் மிதக்கின்றனர். நீங்கள் மட்டும் ஏன் வந்து உங்கள் வீட்டில் வசிக்கக் கூடாது?

மண்ணெண்ணைத் தெருவிளக்கு வெளிச்சத்துடன் வாழ்ந்தோமே ஒரு காலம். இன்று மின்ஒளியில் மிதக்கின்றது யாழ்ப்பாணம்.

வர்த்தக நிலையங்களின் விளம்பரநுட்பம் வியக்க வைக்கின்றது. எட்டாண்டுகளுக்கு முன் பாத்திராத பளபளப்பு வண்ணச் சுவரொட்டிகள், அவை மாதாமாதம் புதுப்பிக்கப்படுகின்றன. ரூபா இரண்டு விலையில் ஷம்பூபைக்கற் விளம்பரப் பலகையின் அளவு சுமார் 50 அடி சதுரம். செல்போன்கள் பலபல வடிவங்களில் எல்லோரும் பயன்படுத்துகின்றனர். றிசட் என்றொரு விளம்பரத் தகரம் மூலை முடுக்கெல்லாம் என்ன இது றிசட் என்று ஆராய்ந்தால் **RICHARD** இன் தமிழாக்கம்- மாணவருக்குரிய அப்பியாசக் கொப்பி - தெற்கிலிருந்து வரும் உற்பத்தி. வெளிநாட்டில் வசிக்கும் எங்கள் உறவினருடன் பேச இன்று யாழ்ப்பாணம் வரவேண்டியதில்லை. நான் பிறந்த சிற்றூரிலும் தொலைத்தொடர்பு நிலையம் இருக்கின்றது. ரேடியோ, ரீவி, கசற் பிளேயர். ஃபான், கிறைன்டர், எயார்கண் டிசன், சைக்கிள் மோட்டர் சைக்கிள், சீன நாட்டுப் பொம்மைகள், இன்னும் பல எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படும் பொன்னுலகம்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நூல் அகம்




பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு என்ற நூல் வெளிவந்துள்ளது. கோபு என்று அழைக்கப்படும் எஸ்.எம்.கோபாலரத்தினம் இந்த நூலை எழுதியிருக்கின்றார். காங்கேசன்துறை வீதியில் உள்ள பாரதி பதிப்பகத்தினர், இந்த நூலை அழகாக அச்சுப் பதித்துள்ளனர்.

ஒரு மனிதன் 50 ஆண்டுகள் வாழ்வது என்பது கேள்விக்குறியாகியுள்ள இந்தச் சூழ்நிலையில், ஒரு துறையில் 50 ஆண்டுகள் பணிபுரிவது என்பது குறிப்பிடப் படவேண்டிய ஒரு விடயமே.

ஐம்பது ஆண்டுகள் பணிபுரிந்த ஒருவர் தன்னுடைய அனுபவங்களை வெளிப்படுத்துவது என்பது இன்னொரு வகையில் சிறப்புக்குரிய ஒரு பணியாகும்.

ஒரு பத்திரிகையாளர் மிகவும் விழிப்பாக இருந்து கொள்ளவேண்டும் என்ற உண்மைகள் இந்த நூலில் அழகாகக் கூறப்பட்டுள்ளன. பத்திரிகையாளனின் விழிப்பான செயற்பாட்டின் மூலமாகவே, மக்களின் நிம்மதியான வாழ்க்கையை வெளிப்படுத்திக் கொள்ளமுடியும் என்பதை பத்திரிகைத் துறையில் அரைநூற்றாண்டு தெளிவாக்குகின்றது.

பத்திரிகையாளன் யாருக்கும் விலைபோகக் கூடாது என்ற உண்மையை விளக்குகின்ற பல சம்பவங்களை கோபு இந்த நூலில் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். அந்த உண்மைகளைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டியது, பத்திரிகையாளர் ஒவ்வொருவருக்கும் தலையாய பணியாக இருக்கின்றது.

தன்னிடம் உணவு உண்டுவிட்டு தன்னைப்பற்றி இவ்வாறு எழுதிவிட்டானே என்று ஒருவர் கோபுவிடம் ஆதங்கப்பட்ட நிகழ்ச்சியை இந்தச் சம்பவங்களில் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

ஒருதுறையில் அனுபவம் வெற்றவர், அந்தத் துறைபற்றிய அறிவுகளைத் தான்பெற்ற அனுபவங்களை எளிதில் யாவருக்கும் சொல்லிவிடுவது என்பது, இல்லாத ஒரு சூழ்நிலையே நிலவுகின்றது.

அவ்வாறு ஒருவர் தன்துறை பற்றிய அனுபவங்களைக் குறிப்பிடும்போது, தான் அடைந்த நன்மைகளையும், தன்னுடைய குறித்த துறை தொடர்பான வளர்ச்சியில் தனக்கு நன்றி புரிந்தவர்களையும் புகழ்ந்து எழுதுவதையே வழக்கமாகிவிட்ட இலக்கியச்சூழல் நிலவுகின்றது.

துறை தொடர்பாக தான் பெற்ற கசப்பான அனுபவங்களை மறந்துவிட்டு இந்த உலகில் நிறைந்த அனுபவங்களுடன் பிறந்ததாகவும், தன்மேல் அதிகம்பேர் அக்கறையோடிருந்து, தன்னை வளர்த்துக்கொண்டதாகவுமே எழுதுவார்கள்.

இவ்வாறு ஒரு இலக்கியச்சூழல் நிலவுகின்ற வேளையில், ஒருவர் தனக்குக் கிடைத்த கசப்பான அனுபவங்களை எழுத இவ்வாறான ஒரு துறையில் செல்லும்போது, துன்பங்கள் ஏற்படும் என்று கூறுவதும், அத்தகைய துன்பங்களைத் தாங்கிக்கொண்டு ஒரு துறைக்குள் செல்லவேண்டும் என்று கூறுவதும், அருமையாகிவிட்ட சூழலில் கோபுவின் பத்திரிகைத் துறையில் அரைநூற்றாண்டு என்ற நூல் வெளிவந்துள்ளது.

இந்த நூல் பல பாகங்களைக்கொண்ட ஒரு பெரும் நூலின் முதற்பாகமாக அமைந்துள்ளது என்று பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தன்னுடைய குருநாதருக்கும், தனக்காக தன்னைத் தியாகஞ்செய்த தந்தைக்கும் இந்த நூலினை அவர் சமர்ப்பணம் செய்கின்றார்.

பத்திரிகைத்துறையில் படி திருத்துனராக ஆரம்பத்தில் இணைந்த கோபாலரத்தினம் கோபு அவர்கள் வீரகேசரியில் ஒரு ஆண்டுகளும், ஈழநாட்டில் இருபத்தியொரு ஆண்டு காலமும் ஆசிரியர் பணியாற்றி பழுத்து நிறைந்து நிற்கின்றார்.

தற்போது ஊர்சுற்றியாக வலம்வந்துகொண்டிருக்கும் கோபுவின் அனுபவங்கள் சாதாரண பத்திரிகையாளன் ஒருவனுக்கு பத்திரிகை நிர்வாகத்துடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், மக்களுடன் எப்படி நடந்துகொள்ளவேண்டும், செய்தி சேகரிக்கும்போது எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு சிறந்த வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது எனலாம்.

பூ.நகுலன்

## நன்றி!

சென்னையிலுள்ள் கோடம்பாக்கம் எனும் இடத்தில் சினிமாப்பட இயக்குநரும், பாடலாசிரியருமான கவிஞர் அறிவுமதியின் செயலாளராக தொழில் புரிந்த காலப்பகுதியில், எனது நண்பன் கிருபன் ஜேர்மனியில் இருந்தான். எனது அலுவலகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு என்னுடன் கதைத்தான்.

தனது அக்காவும், அத்தானும், பிள்ளைகளும் சென்னைக்கு வருவதாகவும் நீதான் அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து, தமிழ் நாட்டினைச் சுற்றிக்காட்டிவிட்டு திருப்பி ஜேர்மனிக்கு பாதுகாப்பாக அனுப்பிவிடும்படியும், ஒரு நாளும் தமிழ் நாட்டிற்கு வரவேயில்லை என்றும், அதுதான் இந்த உதவியை உன்னிடம் நாடுகின்றேன் என்றான்.

சரி.. என்று செல்லிவிட்டு அவர்கள் வரும் நாளிலிருந்து ஒரு மாதத்திற்கு அலுவலகத்தில் விடுமுறை எடுத்து விட்டு...

மீனம்பாக்கம் விமானநிலையத்திற்குச் சென்று கிருபனின் அக்காவையும், அத்தானையும், பிள்ளைகளையும் ஒரு தனி வாகனத்தில் ஏற்றிக்கொண்டுவந்தேன். அவர்கள் தங்குவதறகு எல்லா வசதிகளுமுள்ள தனி வீடொன்றை வாடகைக்கு எடுத்துக்கொடுத்தேன்.

இரண்டுநாள் ஆறுதல் எடுத்தார்கள். அதற்கிடையில் என்னைப்பற்றிக் கேட்டார்கள். நான் சொன்னேன் - கடலினால் தமிழ் நாட்டிற்கு வந்து கஷ்டப்பட்டு இப்போது ஒரு வேலை கிடைத்து செய்துவருகின்றேன். அப்படியா நல்லாய்வருவாய் என்றார்கள். எதுவித சலனமும் இல்லாமல். இரண்டு நாள் கழித்து 8 பேர் இருக்கக் கூடிய குளிர் வசதியுள்ள ரெம்போ வாகனம் ஒன்று வாடகைக்குப் பிடித்து எல்லோரையும் கூட்டிக்கொண்டு தமிழ் நாடடினைச் சுற்றிப்பார்க்கச் சென்றேன். முதலில் தமிழ்நாட்டில் உள்ள பிரசித்திபெற்ற எல்லாக் கோவில்களையும் காட்டிவிட்டு, (ஒவ்வொரு கோவில் உண்டியலுக்குள் 2000 ரூபா இந்தியப்பணம் போட்டனர்) இயற்கைக்குப் பெயர்போன இடங்களான ஊட்டி, கொடைக்கானல் குற்றாலம் போன்ற இடங்களுக்கும் கூட்டிச் சென்று காட்டிவிட்டு. அவர்கள் ஒவ்வொரு இடத்திலையும் பல ஆயிரக்கணக்கான பொருட்களை வாங்கிக்கொண்டு வந்தார்கள். அதாவது காஞ்சிபுரத்தில் பட்டுப்புடவைகளும், கும்பகோணத்தில் ஆறு அடி இரண்டு குத்துவிளக்குகளும், (தங்களது வீட்டிற்கு முன்னே வைப்பதற்காக ) வாங்கிக் கொண்டார்கள். தமிழ்நாட்டினைச் சுற்றிவர 20 நாட்கள் எடுத்திருந்தது.

சுற்றிப் பார்த்த களைப்பிலே இரண்டு நாட்கள் ஆறுதல் எடுத்து விட்டு பின்பு சென்னையிலுள்ள இடங்களான வள்ளுவர் கோட்டம், மெரினா கடற்கரை, சிற்பங்களுக்குப் பெயர் போன மகாவல்லிபுரம்போன்ற இடங்களையும் பார்த்தும், தேவி திரையரங்கில் இரண்டு சினிமாப்படங்கள் பார்த்துவிட, ஜேர்மனிக்குத் திரும்பிச் செல்வதற்கான நாளும் வந்தது. வாங்கிய பொருட்களை பெட்டியில் பார்சல் செய்து தனி வாகனத்தில் எல்லோரையும் ஏற்றிக்கொண்டு விமான நிலையத்திற்கு கொண்டுசென்று பாதுகாப்பாக வழியனுப்பிவைத்னே். என்னைப்பார்த்து நன்றி என்று சொல்லிவிட்டு கைகாட்டலுடன் சென்றுவிட்டார்கள். திரும்பி வந்து வாகனத்தில் ஏறும்போது நினைத்தேன் இந்த மாதம் அலுவலகத்தில் கிடைக்கப் போகின்ற சம்பளமும் கிடைக்கப் போவதில்லை என்று.

-செல்வா-

## தெளிவான நீரோடை!



திண்ம திரவ நிலைகளைத் தாண்டி
கண்மணிக்குள்ளும் அகப்படாத
உருவம்
ஒருவன் உலையிரும்பில்
சிலையாக்க
முயற்சித்துக்கொண்டிருந்தான்.

பெருங்குரலில்
ஒரு குயிற்பேடு
மையவளையம் பற்றிப்பாட
மலர்மடை பரப்பும் தேன்
தொட்டுக் கவியெழுதிற்று காற்று.

எம்மண்ணில்
இன்னும்
அள்ளிக் கூந்தல் முடியாமல்
திரௌபதைகள்
அபிமன்யுவைப் பறிகொடுத்த
அர்ச்சுனர்கள்

எனினும்
இன்னமும்
வீச்சங்குறையாமல்
எனது கனவுப் பெட்டிக்குள்ளும்
அலைகள் இல்லாத
தெளிவான நீரோடை
நிலவு நீந்துகின்ற குளிர் வானம்.

ஏதோ
ஒரு நம்பிக்கையில்
கூட்டுக்குத் தடி முறிக்கும்
குருவிச் சோடிகளோடு
எரிந்த வடலிகளும்
குருத்துவிடத் தொடங்கின.

சிலவேளை
தீ நாக்குப்பட்டு
துணிகள் சிவந்தாலும்
வேளாளர் எழுந்து
தெருப்புழுதி கீறிப்போடும்
கோலம் மாளாது.
மண்ணில் விழுந்து விதை
எழுந்து மீண்டும் ஏர்பிடிக்கும்
காலம் வரும்.

சைலஜா

(எண்ணுவதெல்லாம்...)

முன்னொரு காலத்தில், நீதிமன்றம், வாடிவீடு, மாநகர மண்டபம், சுப்பிரமணியம் பூங்கா இவை இருந்த சந்தியில் நின்று பார்த்தால், போர்அரக்கர்கள் வீட்டுச்சென்ற 'மாதிரிப்' பேய் நகரைப் பார்க்கமுடியும். இதையெல்லாம், இந்த எச்சங்களையெல்லாம் அகற்றிவிட்டுப் புதிதாகக் கட்டுவதா, அல்லது திருத்திப் பயன்படுத்தலாமா? எது சாத்தியம்? என்ற கேள்வி எழும். இதற்கெல்லாம் கோடி கோடியாகப் பணம் தேவையே, யார் தருவார். யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

அரியகுளம் சந்தியில், அடி தெரியாமல் அழிக்கப்பட்ட விகாரை, இப்போ திரும்பவும் எழுந்திருக்கின்றது. நயினாதீவில், இருப்பது போதாதென்று மற்றொரு புத்தர்சிலை கட்ட அத்தியாரம் இட்டுச் சென்றார். அமைச்சர் என்று செய்தி.

வாரும் நண்பரே! வந்து நம் நாட்டுநடப்பை பாரும் .

அமெரிக்காவினால் அழிக்கப்பட்ட ஈராக்கில் புனரமைப்பு வேலைகளுக்கு கோடிக்கணக்கில் நிதியுதவி செய்கின்றனவாம் உலக நாடுகள். எங்களை மட்டும் ஒதுக்கிவிடுவார்களா? சிங்கவாரிசுகளின் நரித்தனங்கள் எத்தனைகாலம்தான் நிலைக்கப் போகின்றன?

எனக்கிருக்கும் கவலையெல்லாம், இறக்குமதியாகியிருக்கும் அந்நிய உற்பத்திகளால் எங்கள் ஏழை உழவர்கள் சுரண்டப்படும்நிலை மாறவேண்டும் என்பதே. மக்களின் நுகர்ச்சிப் பொருள்களை நாங்களே உற்பத்திசெய்து சந்தைப்படுத்த முயற்சிக்கவேண்டும்.

நினைவிருக்கும்போது எனக்கு ஒரு பெருங்காயத் தூள் டப்பி வாங்கிவாரும். வாயுத்தொல்லை சில நேரங்களில் வதைக்கின்றது என்னை.

இறுதியாக உமது பயணம் தொடர்பான எனது ஆலோசனை - அங்கிருந்து கொழும்பு விமான நிலையம் வந்திறங்கி, அங்கிருந்து பலாலி செல்லும் விமானத்தில் ஏறும் திட்டத்துடன் ரிக்கட் எடுப்பதாயின் அதனை மாற்றிக்கொள்ளவும் கொழும்பிலிருந்து தரைமார்க்கமாக யாழ்ப்பாணம் வருவது பயனுடையது. ஏயார்போட் வாசலில் வாடகைவான்கள் நிற்கும் வவுனியாவரை பயணம் சுகமாக இருக்கும். அதற்கு மேலும் சுகமாக இருக்காது. போர்க்களத்தில் அழிந்த தெருக்கள், வீடுகள், கடைகள், மாடிகள், கோயில்கள், பாடசாலைகள், பாலங்கள், எதிரிப்படைகளால் தறிக்கப்பட்ட பனைகளின்அடிகள், ஷெல்வீச்சுக்கு இலக்காகி - இல்லை வேண்டுமென்றே வீசி - கிரீடம் இழந்த தென்னைகள், இத்தகைய வியப்புறும் சோகங்களைப் பார்த்துக் கொண்டே வரமுடியும். அவற்றைத் தவறவிடுவது உகந்ததல்ல. அம்மாவுக்கும் என் அன்பைத் தெரிவிக்கவும்.

நன்றி

வளவன்.


அன்பு நண்பருக்கு

மடல் கிடைத்தது வாசித்து மகிழ்ந்தேன். உம்முடைய எதிர்பார்ப்பை உடைத்தெறியும் வகையில் என்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டிய நிர்பந்தம் பற்றி, எழுதக் கை கூசுகின்றது. மன்னிக்கவேண்டுகிறேன்.

கடந்தமாதம் மகன் குடும்பம் வந்து திரும்பியபோது, எங்களைத் தங்களுடன் வந்து இருக்கும்படி வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போனார்கள் என்னுடைய உடல் நலமின்மையும் ஊருக்குப்போகும் ஆசையும் சொல்லி அவர்களுடைய கோரிக்கையை மறுத்தேன். ஆயினும் அவர்கள் விடுவதாயில்லை எக்சிற் விசாவுக்கு கொடுத்த விண்ணப்பத்தில் செல்லுமிடம் லண்டன், என மாற்றிஎழுதி விசாஅனுமதி பெற்றுக்கொணடேன் நீர் எழுதியது போல, சில அத்தியாவசியப் பொருள்களை மட்டும், புத்தகங்களையும், வீட்டுக்கு - மச்சான் அழகராசாவின் பெயரில் அனுப்பிவிட்டேன் பிறந்த மண்ணில் வந்திருந்து மீதிக காலத்தைக் கழிக்கவே எண்ணியிருந்தேன். 'எண்ணுவதெல்லாம் எய்துவர், எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்ற வள்ளுவர் வாக்குப்படி பார்த்தால் - நான் திடப்புத்தி அற்றவரல்ல என்று நீர் சொல்லலாம். எவ்வாறாயினும் லண்டனில் நீண்டநாள் தங்கியிருக்கும் எண்ணம் எனக்கில்லை. பிறந்த மண்ணுக்கு வருவேன். வந்து உங்களையெல்லாம், பார்ப்பேன். பழகுவேன், மகிழ்வேன் என்ற நம்பிக்கையுடன் மேற்கு நோக்கிப் போகிறேன். நாடு விடுதலை பெற்று பூரணஅமைதியும், வளமும் வளர்ச்சியும் அடையும் நேரத்தில் ஒருவேளை நான் வருவேன். உமது அன்புக்கு நன்றி.

அவைமணி

## பெண்!



குழந்தைகள்
முதுகில் பாய்ந்து ஏறவும்,
சேலையினை இழுத்து அடிக்கடி
மறையவும்,
வீட்டின் திண்ணையும்
வளர்த்த ஆட்டுக்குட்டியும்
முற்றமும்
கிணற்றடியும்
சமையலறையும்
அடிக்கடி எதிர்பார்த்த
அம்மாவை!

ஒவ்வொரு நாளும்
குடித்துவிட்டு கணவன்
ஆக்கினை கொடுத்தும்
சலிக்காத மனம்
மனைவியிடம்!

சுற்றி நான்கு புர
சுவருக்குள் சத்தமாகவும்
பேருந்து தரிப்பிடத்தில்
மௌனமாக உருண்ட
வார்த்தைகளும்
பெருமை கொண்டது
சினேகிதியே!

தனக்காக
பின்னால் அலைபவனும்,
கட்டுப்படுபவனும் இல்லாமலும்
நீ வேண்டும்
எதிர்பார்ப்பு
காதலியிடம்!

எதுவானாலும் முதல் உரிமை,
தூக்கத்தின் போது
எனது
தலையணையைப் பறித்துப்
போகும்,
குளித்த பின்பும் சேறு
பூசும்,
ஒருநாள்
வாங்கிவரவில்லை
பூந்திலட்டு,
கூடுதலாக அழுத
தங்கச்சி!



ஒரு நாள் தவறில்
நாயே பேயே என்று
தலையில்
குட்டுப் போட்டு
காதைத் திருகி
என்னில்
கூடுதலாக எதிர்பார்த்த
அக்கா!


அம்மா அடிக்கவிடாமல்
வழிமறித்து
அக்கா திட்டினால்
திரும்பிப் பேசி
தங்கச்சி செய்யும் குறும்புக்கு
மட்டும்
அனுமதி கொடுக்கும் பாட்டி!

எனக்கு கூடுதலான புத்திமதி,
உரிமையுடன்
எனது வீட்டில்,
என்னை நீயும் உன்னை
நானும்
நினைக்காத வரை
மச்சாள்!

-செல்வம்-

# யாழ். குடாநாடே!

அன்று நீ அழுதபோது அருகில் வராதவரெல்லாம்
இன்று வாக்குக் கேட்டு வாசலில் வருகின்றனர்
கொஞ்சம் விழித்திரு தாயே.




எம் உறவுக் கண்மணிகளை
கதறக் கதறப் பிடித்தபோதும்,
செம்மணியில் புதைத்தபோதும்,
களுத்துறையில் அடைத்தபோதும்
சிங்கள அரசுகளுக்கு சேவகம் செய்தவர்
உந்தன் தெருவுக்கு வருகின்றனர்
கொஞ்சம் விழித்திரு தாயே.






நேற்று வாழ்வை இழந்து தெருவிலென்றானாய்
எவரும் வரவில்லை.
அகதியென்றாகி அந்தரித்தாய்
எதுவும் தரவில்லை.
காட்டிக்கொடுத்தவரும்,
கதறவைத்த பாதகரும்
வாக்குக் கேட்டு வருகின்றனர்.
கொஞ்சம் விழித்திரு தாயே.

அமைதி மூலம் ஒரு வாழ்வு சமைக்க,
பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எடுக்க,
எல்லாவற்றுக்கும் மேலாக
உன் விடுதலை விருப்பையும்,
ஒருமித்த குரலையும் உலகுக்குச் சொல்ல



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து வெல்லச் செய்யவும்.**




**நீடித்த அமைதியும், நிரந்தரத் தீர்வும் கிட்ட உழைப்போமென உறுதியளிக்கிறோம்.**

**– வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கம்**

(சி-2303)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்
நன்னயம் என்னும் செருக்கு

திருக்குறள்

# நமது நோக்கு

## மக்களுக்கு இனங்காட்டப்பட்ட மற்றொரு துரோகி 'கருணா'!

விடுதலைப் போராட்டத்திற்கும், தனித்துவமிக்க தமிழ் தேசியத்திற்கும் எதிரான தீய நாசகார சக்திகளின் தூண்டுதலின் பேரில், அற்பத்தனமான சுயநல உணர்வுகள் மேலோங்கியநிலையில், தன்னை நம்பிய தமிழ் மக்களுக்கும், தான் தனது சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையில் விசுவாசமாக இருக்கவேண்டிய தமிழ் தேசியத் தலைமைக்கும் எதிராக செயற்பட்டு, வரலாற்றுத் துரோகமிழைத்த கருணா என்ற ஒரு காலத்தைய போராளி - அகௌரவமான துரோகி என்ற பட்டப் பெயரைப்பெற்று, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அத தகைய தேசவிரோதிகளின் பட்டியலில் தன்னையும இணைத்துக்கொள்ளும் அளவிற்கு அவமானத்தைச் சுமக்கவேண்டி நேரிட்டது ஒரு பரிதாபகரமான அவலநிகழ்வாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா நீக்கப்பட்டார் என்ற செய்தி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும். தவறுகளை மனனிக்கலாம். ஆனால், நன்கு திட்டமிட்டுத் தான் எந்த மக களுடைய நலனுக்காக, விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறினாரோ, அந்த மக்களுக்கு எதிராக மிகவும் முக்கியமான நெருக்கடியான வரலாற்றுத் திருப்புமுனையை எதிர்கொள்ள வேண்டிய காலகட்டத்தில், அந்நிய மற்றும் தமிழின விரோத சகதிகளின் கைப்பொம்மையாகி - அந்த மக்களுக்கு, அந்த மக களின் ஆற்றல்மிகு ஒரே ஆதாரமான தலைமைக்கு எதிரான சக்தி ஒன்றில் தன்னைப் பிணைத்துக்கொண்டு, அறிக்கை விடுதத அயோக்கியத்தனத்தை மன்னிக்கவோ, மறுக்கவோ தமிழ இனமான உணர்வுகொண்ட எவராலும் முடியாத ஒன்றாகும்

'அதனால்தான், கருணாவின் சுயநலன் வெளிப்பட்டு, அவரின துரோகச் செயல் இனங்காணப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு அவரை விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்குவதையிட்டு நிறைவடைகின்றோம் என்று அரசியற்துறைப் பொறுப்பாளரான சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருக்கும் கருத்தானது அர்த்த முள்ள ஒன்றாகியுள்ளது.

ஒரு தேசத்துரோகிக்கு வழங்கவேண்டிய உடனடி - த்ற காலிக தண்டனையாகவே இது இருக்கமுடியும்.

தமிழ்த் தேசியம் ஒரு வலுவான சக்தியாக உருவாகிவரும் வேளை, அதுவும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழினம் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்து தமது ஒருமைப்பாட்டின் வலுவை சாதி, மத, பிராந்திய மற்றும் பிரதேச வேறுபாடுகளுக் கப்பால் ஓங்கி ஒலிக்கவேண்டிய பொறுப்பினை உணர்ந்து செயற் பட்டுவரும் ஒரு முக்கியகாலத்தில், கருணா தனது செயற்பாட் டின் மூலம் அதனைக்குழப்பி, அந்நிய, தீயசக்திகளுக்கு அரசியல ஆதாயம் காட்டமுயன்றமையானது அவரின் சுயரூபத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் - பிரதேச வாதங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றேயாகும். வடக்கும், கிழக்கும் ஒன்றிணைந்த தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசத்தை, அந்நிய மேலாதிக்கம் மற்றும் சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பு சக்திகளிடமிருந்து விடுவித்து, தமிழ்பேசும் மக்களை சுதந்திர மனிதர்களாக்கிச் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழவைக்கும் உன்னத இலட்சியத்துடன் முன்னெடுக்கப்பட்ட போராட்டமும் ஆகும்.

கடந்த மூன்று தசாப்தகால ஆயதப்போராட்ட வரலாறு எத் தனையோ சுயநலமிகளை, சந்தர்ப்பவாதிகளை, துரோகிகளை, தேசவிரோதிகளை தமிழ்மக்களுக்கு இனங்காட்டியே உள்ளது.

பணத்திற்கும், பதவிக்கும், பவிசான வாழ்விற்கும் சொந்த மண்ணின் விடுதலையை, சொந்த மண்ணின் சுதந்திரத்தை விலைபேசிய துரோகிகளை - விடுதலைப் போராட்டம் நடக்கும் எந்த மண்ணும், விடுதலை உணர்வுள்ள எந்த மக்களும் மன்னித்ததே கிடையாது.

தனது பிரதேச மக்களின் நலனை பாதுகாக்கவே, தான் இந்த முடிவை, அதாவது பிரிந்துசென்று தனித்து இயங்கும் முடிவை எடுத்ததாகக்கூறும் கருணாவின் கூற்றுக்கள் முரண்பாடுமிக்க, அர்த்தமற்ற, ஏற்றுக்கொள்ளமுடியாதவையாகும்.

பிரபாகரனின் நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்க விரும்புவதாகக் கூறிக்கொண்டே, இலங்கை இராணுவத்துடன் பாதுகாப்பு ஏற்பாட்டுக்காக தொடர்புகொண்டது - அவரது பலவீனமான முட்டாள்தனத்தின் உச்சவெளிப்பாடாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தன்னையும், தன் குழுவினரையும் (?!) தனித்தரப்பாகச் சேர்க்குமாறு கோரிக்கை விடுத்தமையானது - தமிழ் இனத்தை கூறுபோட்டு பலவீனப் படுத்த நினைக்கும் சில சக்திகளின் அடிவருடிகளாக மாற்றி விட்டதை உறுதிசெய்வதாக உள்ளது.

'கேடுவரும்போது மதிகெட்டுவடும' என்பார்கள்.

கருணாவுக்கு அந்த நிலை ஏற்பட்டதற்கு அவரது பலவீனஙகளே காரணமாகும். தன்னை பலமானதாகக் காட்டும் பலவீனனின் இயல்பு - அவரது சுயநலத்தைப் பயன்படுத்தி, தமது நலன்களைப் பெற்றுக்கொள்ளமுனையும் சக்திகளின் பிடிக்குள் சிக்கும்போதே அம்பலமாகும் என்பதும் உண்மை.


இப்போது கருணாவின் சுயத்தை, பலவீனத்தை, துரோகத் தனத்தை எல்லாவற்றையும்விட மண்ணையும், மக்களையும் நம்பவைத்து ஏமாற்றிய நயவஞ்சகத்தன்மையைச் சரியான சமயத தில் இனங்கண்டு உணர்த்திய தேசியத் தலைமையின் ஆளுமை யைத் தமிழ்மக்கள் புரிந்துகொண்டிருப்பார்கள்.

தென்தமிழீழ மக்கள் கருணாவின் மற்றொரு இராஜதுரையை இனங்கண்டுகொண்டிருப்பர்.

இலட்சியத்தில் உறுதியுள்ள தலைமையும், அதன் பின்னே அணிதிரண்டு நிற்கும் தமிழ்மக்களும் துரோகிகளால் ஏற்படும் இடையூறுகளைத் தூசாக்கி முன்னேறவே செய்வர்.

வரலாறு தமிழ்மக்களுக்கு உணர்த்தியுள்ள பட்டறிவுப் பாடம இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




# பேச்சுவார்த்தை என்ற பெயரில் புலிகளை ரணில் பலப்படுத்தினார்!

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

தாம் பதவிக்கு வந்தவுடன் யுத்தத்திற்கு முடிவுகட்டப்பட்டு விடும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்திருக்கும் அறிக்கை உண்மைக்குப் புறம்பானது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவிசாவளைப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது -

புலிகள் யுத்தத்தை வெறுப்பதற்குக் காரணம் படையினரின் சாதுரியமான தாக்குதல்களேயாகும். நிலைகுலைந்த புலிகள் யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை.

செப்ரெம்பர் 11 அமெரிக்க உலக வர்த்தக மையம் தாக்குதலுக்குள்ளான பின்னர் பயங்கரவாதத்திற்கு எதிரான எதிர்ப்பலைகள் உலகெங்கும் வலுப்பெற்ற இந்நிலையில் - யார் ஆட்சிக்கு வந்தாலும் பேச்சுவார்த்தைக்கு வரும் நிலையிலேயே புலிகள் காணப்பட்டனர்.

பிரதமர் இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய போதும், புலிகளைத் தம்வழிக்கு இழுக்க அவரால் முடியவில்லை. இந்தநிலையில் உண்மையான சமாதானத்தை நோக்கி நடைபோடவுள்ளோம். தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்து, முதுகெலும்பு உள்ளவர்களாக சமாதானத்தை முன்னெடுப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒற்றுமையின் பெயராலேயே தமிழ்க்கூட்டமைப்பு உருவாகியது

## வன்னி முதன்மை வேட்பாளர் அடைக்கலநாதன்

தேசியத் தலைவரின் வழிகாட்டலில் நடைபெறும் போராட்டத்தில் அனைவருக்கும் சமஉரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் அடைக்கலநாதன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு - வவுனியா மாவட்ட மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

உலகத்தில் பல்வேறுபட்ட இடங்களில், நாடுகளில் சம உரிமை பற்றியெல்லாம் பேசுகிறார்கள். ஆனால், இங்கு தேசியத் தலைவரின்கீழ் நடந்த போராட்டத்தில் சமஉரிமை என்பது அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனை முழுமையாகக் கொண்டு வருவதற்கான ஒரு வடிவம் எங்களது தேசத்தில் நிச்சயமாக இருக்கும்.

ஒற்றுமை பற்றி பேசும்போது நாம் மாவீரர்களை மனதில் கொள்ளவேண்டியது அவசியமாகும். எந்தவித பேதமும் இல்லாது மக்களின் விடுதலைக்காக உயிரைக் கொடுத்தவர்கள். அவர்களின் பெயரால் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே தமிழ்தேசியக் கூட்டமைப்பு இன்று உருவாகியுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் இந்த உருவாக்கம் நிச்சயமாக வெற்றியைக் கொண்டுவருவதற்கு குரல் கொடுக்கும். எனவே மக்கள் அந்த வெற்றிக்காக வாக்களிக்கவேண்டும் என வலியுறுத்தினார். (03)

# 95 பெண் வேட்பாளர்களே இம்முறை தேர்தலில் போட்டி

ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் மிகக்குறைந்தளவான பெண் வேட்பாளர்களே போட்டியில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதும் - நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பெண் உரிமை அமைப்புக்கள் பிரபல்யமாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடம், வேட்பாளர்கள் பட்டியலில் மூன்றில் ஒரு பங்கு பெண் வேட்பாளர்களை நிறுத்துமாறு கேட்டிருந்தனர்.

ஆனாலும், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் 95 பெண் வேட்பாளர்களே போட்டியில் நிறுத்தப்பட்டிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. 23 பெண் வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை தேசிய மக்கள் கட்சி கொழும்பு மாவட்டத்தில் சமர்ப்பித்தது.

சட்டத்துறை ஷாமினா உதயகங்கனி தருவத்த தலைமையிலேயே கொழும்பு மாவட்டத்தில் பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

ஏனைய மாவட்டங்கள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் சார்பில் மிகக்குறைந்தளவினரே வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

மிகக்குறைந்தளவான பெண் வேட்பாளர்களே தேர்தலில் நிறுத்தப்பட்டிருப்பதனால், பெண்கள் அமைப்புக்கள் சில அதிருப்தி வெளியிட்டிருக்கின்றன.

*இதேவேளை, தேசியபட்டியலில் ஐக்கியதேசிய முன்*னணியில் 4 பெண்களின் பெயர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4 பெண்களின் பெயர்களையும், சிறிலங்கா முற்போக்கு முன்னணி 3 பெண்களின் பெயர்களையும் சமர்ப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமாக, 5698 வேட்பாளர்கள் பேட்டியிடுகின்றனர்.

# கண்ணிவெடியிலிருந்து பாதுகாப்பு இருநாள் பயிற்சிப் பட்டறை!

யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் தென்மராட்சி வலயக் கல்விததிணைக்களத்தினால் நடத்தப்படும் கண்ணிவெடி அனர்த தங்களிலிருந்து பாதுகாப்பு பெறல் சம்பந்தமான இரு நாள் பயிற்சிப்பட்டறை - எதிர்வரும் 12,13,19,20,26,27 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

12,13,19,20 ஆகிய திகதிகளில் சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கும, 2 ஆம்தர. ஆசிரியர்களுக்கும் -

19,20 ஆம் திகதிகளில் 3 ஆம்தர ஆசிரியர்களுக்கும், 26, 27 ஆம் திகதிகளில் 4, 5 ஆம்தர ஆசிரியர்களுக்கும் நடத தப்படவுள்ளது. இந்த ஆசிரியர்கள் அனைவரையும் குறிப்பிட்ட திகதிகளில் தவறாது சமூகமளிக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (44,25)

தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித் -





ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் தமக்கிடையே இணக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தால், இவ்வாறான ஒரு சூழ்நிலையைத் தடுத்திருக்கலாம். விடயங்கள் மற்றும் சம்பவங்கள் நடந்த பின்னரே அதன் விளைவுகள் குறித்து கவலைப்படும் அரசியல்போக்கு இலங்கையில் தொடர்ந்துகொண்டிருப்பது இனவாதிகளுக்கும், மத அடிப்படைவாதிகளுக்குமே வாய்ப்புகளை வழங்கிவருகிறது. மறுபுறத்தில் இக்குழுக்கள் மக்களுக்கிடையேயான இடைவெளிகளை மேலும் அதிகரிக்கவே உதவுகிறது. இந்த அபாயகரமான தன்மையை ஜனாதிபதியும் பிரதமரும் உணர்ந்தே வைத்துள்ளனர். ஆனால், தமது அரசியல் நலன்கருதி இதனை அவர்கள் தமக்கு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள முனை கின்றனர்.

# இனப்பிரச்சினைத் தீர்வை தாமதமாக்கும் மதவாதம்

**பௌ**த்த மதத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் ஆட்சி அதிகாரங்கள் செயற்பட்டுவந்தமையே இதுவரை காலமும் இலங்கையில் தீராத பிரச்சினை ஒன்றுக்கு காரணமாக இருந்துவருகிறது. பௌத்தமதம் சீரிய தர்மங்களை போதிக்கின்றபோதும் அதனைப் பின்பற்றுபவர்கள் சிங்களவர்கள் மட்டுமே என்ற தோரணையில் சட்டவாக்கங்கள் அனைத்தும் அவர்களுக்கு சார்பாகவே செய்யப்பட்டன. 1956 ஆம் ஆண்டின் தனிச்சிங்கள சட்டம் இதற்கு ஒரு சான்றாகும். அன்று ஆரம்பித்த இலங்கையின் இனப்பிரச்சினை தீவிரம் தற்சமயம் தீர்க்கமுடியாத நிலைக்குச் சென்றுள்ளது. வரலாற்று ரீதியாக சிங்களவர்களும், தமிழர்களும் இந்திய வம்சாவளிகள் என்ற அடிப்படையில் அவர்களுக்கிடையில் மொழியில் மாத்திரமே வேறுபாடு காணப்பட்டது. ஏனைய அனைத்து அம்சங்களும் ஒன்றில் ஒன்று பின்னிப்பிணைந்தே காணப்படுகின்றன. அவ்வாறான இரண்டு சமூகங்களுக்கிடையில் பாரிய பிளவு ஒன்றை ஏற்படுத்திய பொறுப்பு குறுகிய சிந்தனைகொண்ட சிங்களத் தலைமைத்துவங்களையே சுட்டிநிற்கின்றன. இந்தப் பிளவுத் தன்மையைக் களையவேண்டுமானால் அதற்காக சிங்கள சமூகம் பல விட்டுக்கொடுப்புகளுக்கு இணங்கியே ஆகவேண்டும் என்ற கட்டாயம் தற்சமயம் எழுந்துள்ளது. இந்தக் கட்டாயத்தை இலங்கை அரசியல்வாதிகள் எற்றுக்கொள்கின்றபோதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தயங்கியே நிற்கின்றனர். 1987 ஆம் ஆண்டு இந்தியாவின் வலியுறுத்தலின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு இணக்கம் தெரிவித்தார். அதிலும் ஜே.ஆரின் தலைமை நாட்டின் நலன்கருதி செயற்படவில்லை என்றே கூறவேண்டும். இந்திய நலனுக்கு துணை போகும் நடவடிக்கையையே ஜனாதிபதி ஜெயவர்த்தனா அன்று மேற்கொண்டார்.

அதே நேரம், தனக்குரிய அரசியல் தந்திரத்தை ஒரு அம்சமாக இலங்கையின் போராளி இயக்கங்களை அதே இந்தியாவுடன் யுத்தம் ஒன்றிற்கு இட்டுச்செல்வதிலும் ஜயவர்த்தனாவால் வெற்றிகாண முடிந்தது.

இதன் தொடர் இன்றும் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் சிக்கலான நிலையை உண்டுபண்ணியுள்ளது. ஜே.ஆர். ஜெயவர்த்தனா எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கும் முன்பு பௌத்த பிக்குகளை ஆலோசிக்கும் நடைமுறையைக் கொண்டிருந்தமை அனைவரும் அறிந்த விடயம். அதே நடைமுறையைத்தான் அடுத்து வந்த அடுத்த தலைமைகளும் பின்பற்றுகின்றன. அன்றுமுதல் இந்த பௌத்த பிக்குமார் நாட்டின் பிரச்சினையை தர்ம போதனையின் அடிப்படையில் தீர்ப்பதற்கான திட்டங்களை சிங்கள தலைமைகளும் வழங்வில்லை. அதில் முக்கியமாக மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடக் கூடியவர்கள். நடைமுறையில் இந்த மகாநாயக்க தேரர்கள் நாட்டின் பிரச்சினை தீரவேண்டும் என்பதில் ஓரளவான உண்மைத் தன்மையை வெளிப்படுத்திவருகின்றனர். அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்கள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்திவருகின்றனர். முன்னர் ஒற்றையாட்சியின் மூலமே இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் எனக் கூறி வந்த இந்த மகாநாயக்கர்கள் தற்சமயம் அதிலிருந்து கீழிறங்கி சமஷ்டி நிலைப்பாட்டிற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

சமஷ்டி முறையில் இனக் குழுக்களுக்கிடையிலான உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்ற அடிப்படையிலே அனைத்து தரப்புக்களும் அந்தத் தீர்வுப் பழியை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த நிலையில் பௌத்த பிக்குமாரும் தீவிரவாத அடிப்படைக்குழுவொன்று இந்தத் தீர்வுக்கு எதிராக செயற்படுவது நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பெரிதும் சிக்கலான நிலைப்பாட்டிற்குட்பட்டிருப்பதை சுட்டிநிற்கின்றது. சிஹல உறுமய கட்சியின் மூலம் பௌத்த தர்மத்திற்கு அப்பாற்பட்ட பௌத்த பிக்குகளின் குழுவொன்று அரசியலில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு ஹெல உறுமய என்ற பெயருடன் நேரடியான அரசியலிலும் இன்று தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளது. ஏற்கனவே இனக்குரோத அடிப்படையில் செயற்பட்டுவந்த எல்லாவல மேதானந்ததேரர் தலைமையிலான பௌத்த பிக்குகளின் குழுவே இந்த முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. இந்த பௌத்த பிக்குகள் அரசியலுக்கு வந்த செயற்பாடானது ஆரம்பத்தில் விமர்சிக்கப்பட்டபோதும், பின்னர் அந்த விமர்சனங்களுக்கு வலுவில்லாமல் போய்விட்டது. ஏனெனில், இந்த பௌத்த பிக்குகளின் குழு பௌத்தர்களால் மதிக்கப்படும் அஸ்கிரிய, மல்வத்த, ராமானிய போன்ற பௌத்த உயர் பீடங்களுக்கு கட்டுப்படாமல் தேசிய சங்கசபை எனத் தனித்தே செயற்பட்டுவருகிறது. எனவே, அதனைக் கட்டுப்படுத்தக்கூடிய உரிமை மகாசங்க தேரர்களுக்கு இல்லாமற்போயுள்ளது. இந்த சூழ்நிலையில் நேரடி அரசியலுக்குப் புறப்பட்டுள்ள பௌத்த தேரர்கள் மதகுருமார் என்ற அடிப்படையில் அல்லாது அரசியல்வாதிகள் என்ற தரத்திலேயே பார்க்கப்படும் என்ற அளவுக்கு தம்மை சிறுமைப்படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக அண்மையில் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்த இரண்டு பௌத்த பிக்குகள், தமக்கிடையேயான முறுகல் காரணமாக தேர்தலிலிருந்து ஒதுங்கிக் கொண்டமையைக் குறிப்பிடலாம்.

நீர்கொழும்பையும், கம்பஹாவையும் சேர்ந்த இரண்டு பௌத்த பிக்குகளே இவ்வாறு விலகிக்கொண்டவர்கள் ஆவார். முன்னர் பௌத்த இனத்திற்காக போராடப் போவதாகக்கூறிய இவர்கள், தாம் உரிய தெளிவின்றியே தேர்தலில் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பௌத்த பிக்குமார் அரசியல்வாதிகளுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும்முகமாக மற்றுமொரு சம்பவமும் அண்மையில் நிகழ்ந்துள்ளது. தேசிய சங்கசபையின் கூட்டமொன்று, பாணந்துறை நகரில் இடம்பெற்றவேளையில் இலங்கையின் முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றின் இரண்டு அதிகாரிகள், கூட்டத்தில் பங்குகொண்டோரால் தாக்கப்பட்டனர். அத்துடன், அந்த இரண்டு நிர்வாகிகளும் நிர்வாணமாக்கப்பட்டு இம்சைப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, கங்ஹொடவில சோமதேரரின் மரணத்திற்கு கிறிஸ்தவ அடிப்படைவாதிகளே காரணமென பௌத்த பிக்குமார் குற்றம் சுமத்திவருகின்றனர். அந்தக் கிறிஸ்தவ அடிப்படைவாத குழுவாக அவர்கள் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தையும் அடையாளப்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் தம்மை கிறிஸ்தவ அடிப்படைவாதக் குழுவாக பௌத்த பிக்குமார் அடையாளப்படுத்துவதை விரும்பாத நிறுவன முகாமை, அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கு முனைப்பை மேற்கொண்டுள்ளது. இதற்கு ஆதாரமாக வீடியோ நாடாவை நீதிமன்றத்தில் சமர்பிக்கும் முகமாக சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகளும் பாணந்துறை கூட்டத்திற்கு சென்றிருந்தனர். இவர்களின் வருகையை அறிந்துகொண்ட தேசிய சங்கசபையும், சிஹல உறுமய கட்சியும் இவர்களைத் தாக்கியுள்ளது. பாணந்துறைக் கூட்டத்தில் இந்தத் தனியார் நிறுவனத்தைத் தேசிய சங்கசபை மீண்டும் கிறிஸ்தவ அடிப்படைவாதக் குழுவாக கருதி அதற்கு எதிராக விமர்சனங்களையும் வெளியிட்டது.

இதுவரை கூறிவந்த சம்பவங்கள் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வை மேலும் தாமதப்படுத்தும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. இதுவரை காலமும் தமிழர், சிங்களவர் என்ற பேதங்கள் மாத்திரமே இருந்து வந்தது. அண்மைக்காலத்தில் முஸ்லிம், சிங்கள பிரச்சினையே ஏற்பட்டிருந்தது. எனினும், மதப்பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கவில்லை. தற்சமயம் எழுந்துள்ள இந்தப் பிரச்சினை காரணமாக சர்வதேசத்திலிருந்து இலங்கைக்கான உதவிகள் குறைந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இலங்கை இனப் பிரச்சினைத்தீர்வு ஆலோசனை மற்றும் உதவி வழங்கும் நாடுகள் அனைத்தும் கிறிஸ்தவ நாடுகளே. இலங்கையில் தமது மதத்துக் கெதிரான செயற்பாடுகள் நடைபெறுகின்றபோது, அதனை அந்த நாடுகள் ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகமே. எனவே, அந்த நாடுகள் நிச்சயமாக மாற்று நடவடிக்கைகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவ்வாறு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளாதபோது, அது குறிப்பிட்ட நாடுகளின் மக்கள் மத்தியில் அதிருப்தி அலையைக் கொண்டு வரக்கூடும். அதன் காரணமாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு அந்த நாட்டின் மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவர். இவ்வாறான முறுகல் நிலையொன்றை ஏற்படுத்தியுள்ள இலங்கையின் பௌத்த பிக்குகளின் நேரடி அரசியல் பிரவேசம் தற்சமயம் இலங்கையின் பெரும்பான்மைத் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமஷ்டித் தீர்வு இலங்கையையும் பாதிக்கும்.

ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் தமக்கிடையே இணக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தால், இவ்வாறான ஒரு சூழ்நிலையைத் தடுத்திருக்கலாம். விடயங்கள் மற்றும் சம்பவங்கள் நடந்த பின்னரே அதன் விளைவுகள் குறித்துக் கவலைப்படும் அரசியல்போக்கு இலங்கையில் தொடர்ந்து கொண்டிருப்பது இனவாதிகளுக்கும், மத அடிப்படைவாதிகளுக்குமே வாய்ப்புகளை வழங்கிவருகிறது. மறுபுறத்தில் இக்குழுக்கள் மக்களுக்கிடையேயான இடைவெளிகளை மேலும் அதிகரிக்கவே உதவுகிறது. இந்த அபாயகரமான தன்மையை ஜனாதிபதியும் பிரதமரும் உணர்ந்தேவைத்துள்ளனர். ஆனால், தமது அரசியல் நலன்கருதி இதனை அவர்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முனைகின்றனர். ஆனால், இந்த நிலைப்பாடு இன்று ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் வெற்றியைப் பாதித்துள்ளது. பௌத்த பிக்குமாரின் இந்த ஆதரவின் மூலம் ஜனாதிபதி மேற்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகள் இன்று அவரையே பாதிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன. பௌத்த பிக்குமார் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சிங்கள அடிப்படைவாதிகளை கடந்த இரண்டு வருடகாலமாக தம்வசப்படுத்தி வைத்திருந்த ஜனாதிபதியும் மக்கள் விடுதலை முன்னணியினதும் அந்த ஆதரவை இழந்துள்ளனர். தாம் ஆட்சிக்கு வந்தால், யுத்தம் ஏற்படாது என்பதை நம்பவைக்கவேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இருக்கும் முக்கிய சவாலாகும்.

எனினும், ஹெல உறுமய பௌத்த பிக்குகளைப் பொறுத்தவரையில் இந்தப் பொறுப்பு அவர்களுக்கு இல்லை. அவர்களின் பிரதான இலக்கு சிங்களத்துவத்தை நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்திற்குச் செல்வதே ஆகும். அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட பௌத்த தர்மத்தின் அடிப்படையில் இலங்கையில் ஆட்சி அமைக்கப்பட்டு சிங்கள மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இவர்களின் இந்தப் போக்குக் காரணமாக தேர்தல் பிரசார மேடைகளில் இனவாதக் கருத்துக்களைத் தவிர்த்து சமாதானத்தை வலியுறுத்தும் கொள்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பேசவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளது. ஏற்கனவே, திட்டமிட்டபடி பிரசாரங்கள் முன்னெடுக்கப்படாமல் இடைவழியில் பிரசார உத்திகள் மாற்றப்பட்டமையும் அந்த முன்னணிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் 26 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் தற்போதைய நிலவரப்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிவாய்ப்பு மங்கிய நிலையிலேயே இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரங்கள் மக்கள் மத்தியில் எடுபடத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே அந்தக் கட்சியுடன் அரசாங்கத்தில் அங்கம் வகித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பலமான தரப்பு என்பவை ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஆதரவு வழங்குவது அந்தக் கட்சியை மீண்டும் ஆட்சியமைக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவு ஐக்கிய தேசிய கட்சிக்கே இருப்பதாக சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கை நிலவுகிறது. எனவே, யுத்தம் மீண்டும் ஏற்படாது என்ற கருதுகோளில் அவர்கள் செயற்படுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தால் யுத்தம் ஏற்படாதென பெரும்பான்மை சிங்கள மக்கள் கருதுகின்றபோதும், அந்த ஆட்சி வருமானால் உடனடியான சமாதானம் ஏற்படும் என்பதில் தமிழ் மக்களைப்போல அவர்களுக்கும் நம்பிக்கையில்லை.

நாட்டில் வளர்ந்துவிட்ட சிங்கள இனவாதத்துக்கு மத்தியில் ஹெல உறுமய பௌத்த பிக்குகளின் நேரடி அரசியலின் பின்பும் ரணில் விக்கிரமசிங்க சிங்களவர்களை திருப்திப்படுத்தாத இனப்பிரச்சினைத் தீர்வு ஒன்றுக்கு இணங்கமாட்டார் என்றே சாதாரண சிங்கள மக்கள் எண்ணுகிறார்கள்.

# அரசாங்க அறிவித்தல்

## பாராளுமன்ற தேர்தல்கள் -2004
## தேர்தல் மாவட்டம் இல. 10 - யாழ்ப்பாணம்

### உடற்றகுதியீனம் உள்ளோர் பிரத்தியேக போக்குவரத்து வசதிக்காக விண்ணப்பித்தல் - பிரிவு 83/4 (4) ஈ

உடற்றகுதியீனம் உற்றவர் அல்லது அவர் சார்பாக வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் 2004.03.25ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது உடற்றகுதியீனம் பற்றிய விண்ணப்பத்தை எனக்கு அனுப்பி வைக்கவேண்டும். இவ்விண்ணப்பப்படிவங்களை தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தவிர்க்கமுடியாதவிடத்து, இத்துடன் பிரசுரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமையத் தயாரித்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்பட்ட வைத்தியரின் அறிக்கை அல்லது ஆயுள்வேத வைத்தியரின் அறிக்கை அல்லது தனியார் வைத்தியரின் அறிக்கை இணைக்கப்பட வேண்டும். இவ் அறிக்கையில் வைத்தியரின் பெயர், பதிவிலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

உடற்றகுதியீனம் உள்ள ஒருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்கு நடந்தோ அன்றி ஏதேனும் பொதுப்போக்குவரத்துச் சேவை வாகனத்திலோ செல்வதற்கு இயலாதவராய் உள்ளார் என்று திருப்திப்படுமிடத்து, வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்வதற்கும், வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து திரும்பி வருவதற்கும் வாகனம் ஒன்றை உபயோகப்படுத்துவதற்கான அனுமதி என்னால் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 2004.03.25**

தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல: 10 - யாழ்ப்பாணம்.

### 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்
### பாராளுமன்றத் தேர்தல் - 2004.04.02

### 83 (4) (ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கென உடற்தகுதியீனமுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்

.................................................. தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு.

(1) உடற்றகுதியீனம் உள்ளவரின் விபரம் : ..................................................
..................................................

(அ) முழுப்பெயர் : ..................................................

(ஆ) அஞ்சல் முகவரி : ..................................................
..................................................
..................................................

(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்) :
..................................................

(2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விபரம் : ..................................................

(3) உடற்றகுதியீனம் உள்ளவருக்காக வேறு எவராலும் விண்ணப்பப் படிவம் அனப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும் : ..................................................

(4) இவ்விண்ணப்பத்தைப் பரிசீலனைக்கெடுப்பதற்கேதுவாக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில்புரியும் ஒருவரின்/ ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியர் பெயர் : ..................................................

பதிவிலக்கம் : ..................................................

(5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு / உடற்றகுதியீனம் உற்றுள்ள மேலே காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும பொதுப் போக்குவரத்து சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் ஒரு வாக்கெடுப்புக்குப் போகமுடியாதென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

(6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வருவதற்கென நான் / உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்துமூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.


..................................................
உடற்றகுதியீனமானவரின்/அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

திகதி : ..................

(சி-2304)

போர்க்காலக் குற்றங்கள் தொடர்பான

## தகவல்களைச் சேகரிப்பதற்கு அமெரிக்க அதிகாரிகள் ஈராக் விஜயம்



(வாஷிங்ரன்)

ஈராக்கில் - போர்க்காலத்தில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு, 50 இற்கும் மேற்பட்ட அமெரிக்கக் குற்றவியல் நிபுணர்களும், சட்ட வல்லுநர்களும் ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். ஈராக்கின் முன்னாள் தலைவர் சதாம் ஹுசைனும் அவரது பிராந்திய தலைவர்களும் போர்க்காலத்தில் மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கவுள்ளனர்.

இந்தத் தகவல்கள் மூலம், ஈராக்கில் அமைக்கப்படவுள்ள புதிய அரசிற்கு, போர்க்காலக் குற்றவாளிகள் தொடர்பான விசாரணைக்கு உதவ முடியுமென அமெரிக்காவின் நீதி அமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

அமெரிக்காவின் விசாரணைக்கான சமஷ்டி அமைப்பும், பிரித்தானியா, ஸ்பெயின், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் விசாரணைக்குழுக்களும் போர்க்காலத்து குற்றவாளிகளின் தகவல்களைச் சேகரிப்பதற்கு உதவிபுரியவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த ஆண்டிற்குள் முன்னாள் ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிரான குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு சபை அதிகாரி 'கொண்டோ லீசா தய்ஷ்' தெரிவித்தார்.

இதனிடையே, முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதிக்கு எப்படியான தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதைப் புதிய ஈராக்கிய அரசே தீர்மானிக்க வேண்டும் என, ஈராக்கில் உள்ள அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஆட்சிக காலத்துத் தலைவர்கள் பலர் அமெரிக்கக் கூட்டுப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், சதாம் ஹுசைன் தூக்கிலிடப்படவேண்டும் என்ற கருத்தை அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

## இஸ்ரேல் படையினர் தாக்குதல் 15 பலஸ்தீன பொதுமக்கள் பலி



டாங்கிகள், ஹெலிகொப்ரர்களின் உதவியுடன் இஸ்ரேலியப் படையினர் - காஸா பகுதியில் பலஸ்தீனப் போராளிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.


கொல்லப்பட்டவர்களில் 3 துப்பாக்கிதாரிகளும் 15 வயதுடைய ஒரு சிறுவனும் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் அல் - புரொய், நுசெய்ராஸ்ட் ஆகிய அகதி முகாம்களில் - பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீன துப்பாக்கிதாரியொருவர் - காஸாவிலிருந்து இஸ்ரேலுக்குள் செல்லும் பாதையில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட பின்னரே இஸ்ரேலியப் படையினர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் இஸ்ரேலியப் படையினர், தமது கவச வாகனங்களில் இரவுவேளையில் முகாமைச் சுற்றிவளைத்தனர். பின் இரு பகுதியினரிடையேயும் உக்கிரமான மோதல்கள் ஆரம்பித்ததாகவும் பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலியப் படையினருடன் நேரடி மோதல்களில் ஈடுபட்டதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீன வைத்திய அதிகாரிகள் - குழந்தைகள் உட்பட 20 இற்கு மேற்பட்டவர்கள் காயப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

## 500 மெற்றிக்தொன் அணுஆயுத உபகரணங்களை லிபியா, அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ளது



(வாஷிங்ரன்)


லிபியா தன்வசம் வைத்திருந்த 500 மெற்றிக்தொன் எடையுள்ள அணுவாயுத உற்பத்தி தொடர்பான உபகரணங்களைக் கப்பல் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ளதாக, வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கீன் மக்கோமாக் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் - லிபியாவுக்கும் இடையே உருவாக்கப்பட்ட அணுவாயுதக் களைவு ஒப்பந்தத்தின் மூலமே இவை அகற்றக்கூடியதாக அமைந்திருந்தது.

அமெரிக்காவுக்கு அனுபப்பட்ட ஆயுதங்களில் நீண்ட தூரத்துக்குச் செல்லும் எறிகணைகளும், அவற்றை ஏவுவதற்கான தளமும் பகுதிகளும் அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இநத அணு ஆயுதங்கள் தொடர்பான உபகரணங்களை அனுப்பியுள்ளமை இரு நாடுகளிடையேயும் உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக பி.பி.சியின் ரெப் ஹட்சன் தெரிவித்ததுடன், இதன்மூலம் லிபியா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் பயனடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக நாடுகளிலிருந்து தனித்து விடப்பட்ட நிலை முடிவுக்கு வந்துள்ளதெனவும், இதேநேரத்தில் உலகின் அணுவாயுதங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு உத்தேசித்துள்ள நாடுகளில் அமெரிக்கா லிபியாவை முன்னுதாரணமாகக் காண்பிக்க முடியுமெனவும் பி.பி.சியின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



அத்துடன், சென்றவாரம் அமெரிக்கர்கள் - லிபியாவுக்கு விஜயம் செய்வதற்கான தடையை அமெரிக்கா அகற்றியுள்ளது. அத்துடன் லிபிய இராஜதந்திரிகள் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளளது.

இதனிடையே பிறிதொரு கப்பல் மூலம் - யுரேனியத்தை செறிவுபடுத்தும் உபகரணங்களும் மிகுதியாக உள்ள ஏவுகணைகளும் அனுப்பப்படவுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## வடபகுதி பிரச்சினையை
# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே தீர்க்கக்கூடிய திறமை பெற்றுள்ளது!
## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியும், அரசியலமைப்பின் அதிகாரமும் ஒரே கட்சிக்கு கிடைத்து ஆட்சியமைக்கும் அரசாங்கத்தினாலேயே வடபகுதி பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணை அமைப்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. எதிர்வரும் தேர்தலின்பின் ஆட்சியமைக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு அந்தப் பொறுப்பும், திறமையும் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, நிர்வாக நடவடிக்கைகளில் சிக்கல்கள் ஆகியவற்றினால் அரசாங்கம் குறுகிய காலத்தில் மக்களிடையே செல்வாக்கு இழந்துள்ளது.

சகல பகுதிகளில் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு நாளும் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துகொள்வதால், இது உறுதிப்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்க் குழுக்களின் உதவியுடன்
# எஸ்.பி.திஸநாயக்கவை கொல்வதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு சதியாம்!
## தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் மேலிடத்தின் உத்தரவின் பேரில் தன்னைப் படுகொலை செய்ய தமிழ்க்குழுக்களின் உதவியினை நாடியுள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க - தேர்தல் ஆணையாளர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுள்ளார்.

அத்துடன், தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஹிங்குராங்கெத்த, நுவரெலியா, வலப்பனை போன்ற பிரதேசங்களில் திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டுவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும் அந்த வன்முறைகளின் பொறுப்பை தன்மீது சுமத்தி தமது பெயருக்கு களங்கம் விளைவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை தொடர்ந்தால், இந்தப் பிரதேசங்களில் நீதியான, நியாயமான தேர்தல் நடைபெறும் என்று தன்னால் உறுதிப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகிறார்

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகின்றார்.

ஒருவார காலம் இங்கு தங்கியிருக்கும் சொல்ஹெய்ம் - விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்கள் குறித்தும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் அரச மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், கண்காணிப்புக் குழு அதிகாரிகளையும் சந்தித்து தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவார்.

வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

### அந்நிய...

ஆகவே, இவரின் இந்த முடிவிற்கு விரைவில் ஒரு தீர்வு காணப்பட்டு தமிழ்த் தேசியத்தை ஏற்றுக்கொண்டு எல்லா மக்களும் செயற்படுகின்ற நிலையை நாங்கள் உருவாக்குவோம் என்பதை நம்பிககையோடு தெரிவிக்கிறோம் என கரிகாலன் மேலும் குறிப்பிட்டார்.

### ஒருங்....

றும் பொறுப்பாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் வன்னிப் பகுதிக்கு வந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, நேற்று மாலை மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சிக்குத் திரும்பிய புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பு பகுதியில் ஏற்பட்டிருக்கும் இறுதியான நிலைவரம் குறித்து தலைமைப்பீடத்துக்கு எடுத்துக்கூறியதாக இணையத்தளச் செய்தியொன்று தெரிவித்தது.

## கிழக்கு பல்கலைக்கழக...

கள் மட்டும் 160 பேர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு நேற்றுக்காலை திருகோணமலையைச் சென்றடைந்தனர்.

இதேவேளை, கிழக்கு பல்கலைகழக மாணவர் சமூகம் என்ற பெயரில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டதற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் சமூகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த சமூகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் எனும் பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை.

நாம் அனைவரும் இந்த துண்டுப் பிரசுரம் வெளியிடும் முன்னரே பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிவிட்டோம். ஆகவே, இந்த துண்டுப்பிரசுரம் ஒரு பிழையான நடவடிக்கை என்பதை சகலருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

அத்துடன், கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் சமூகம் எனும்போது திருமலை மாவட்டமும் உள்ளடக்கப்படுகின்றது. இதனால்' இந்த துண்டுப் பிரசுரத்திற்கெதிரான மறுப்பறிக்கையை விடவேண்டியவர்களாக நாம் உள்ளோம் எனவும் திருமலை மாவட்ட மாணவர் சமூகம் தெரிவித்துள்ளது. (04,10)

## குடாநாட்டு...

இறந்தவர் தாவடியைச் சேர்ந்த சுப்பையா இராசையா (வயது 68) எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரை மோதிய ஹையேஸ் வான் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ். பல்கலைக் கழக கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக வவுனியாவிலிருந்து வருகை தந்த இருவர் மோட்டார் சைக்கிளில் யாழ். நகரப் பகுதிக்குச் சென்ற சமயம் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்தனர். இவர்கள் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பணிபுரியும் கிறிஸ்தோபர் விமலேஸ் (வயது 29), கணபதிப்பிள்ளை (வயது 32) ஆகியோர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தனது உறவினரைப் பார்வையிடச் சென்றுவிட்டு வீடு திரும்பிய வயோதிபப் பெண்ணொருவர் யாழ். நகரப்பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ.லூர்த்துநாயகி (வயது 68) என்பவரே தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவராவார். (121,13)

## எப்படி கையாள வேண்டு...

அதையும் மறுத்தார்.

அத்துடன், எம்மை இதுகுறித்து தலைவருடன் கதைக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டதுடன், நாம் தலைவருடன் இது குறித்து பேசிவிடுவோம் என்ற அச்சத்தில், எம்மை எமது தலைவருடன் நேரடியாகப் பேசுவதற்கும் அனுமதி தர மறுத்துவிட்டார். இப்படியான சூழ்நிலையில் என்னிடம் தரப்பட்டுள்ள பொறுப்பை மிகவும் அவதானத்துடன் கையாள்வதுடன், கருணா குறித்த விடயத்திலும் மிக நிதானத்துடன் செயற்படவுள்ளேன்.

மட்டக்களப்பு - அம்பாறை மக்கள் மிக அதிகமான அர்ப்பணிப்பையும் தியாகங்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக பல வருடங்களாகச் செய்துள்ளார்கள், அவர்களை நாம் ஏமாற்றமுடியாது,

மாறாக, அவர்கள் அனைவரின் அபிலாஷைகளையும் கருத்திற் கொண்டு, மிகச்சிறந்த தீர்வைக் கொண்டுவரவே எமது தலைவர் கடுமையாக உழைக்கிறார்.

மட்டக்களப்பு - அம்பாறை மக்கள் தொடர்ந்தும் தங்களது முழுமையான ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்குவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தற்போது பொதுமக்கள் அனைவரும் தங்களது பேராதரவை தமிழர் தேசிய கூட்டமைப்புக்கு வழங்குவதன்மூலம், எதிர்வரும் பொதுத்தேர்தலில் அவர்களை முழுமையான வெற்றியடைய வைப்பதே தங்களது முதன்மையான நோக்கமாக உள்ளது என்றும் தளபதி ரமேஷ் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத் தளத்தில்...

இடங்களிலிருந்து தீயணைப்புப் படையினர் விரைந்தனர். பெரும் போராட்டத்தின் பின்னரே இந்தத் தீ கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வெடி விபத்துச் சம்பவத்தில் படையினர் எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை. எனினும் வெடித்துச் சிதறிய கொள்கலனில் பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் இருந்ததாகவும் - இவை முற்றாக அழிந்ததனால் இராணுவத்துக்கு பெருமளவு இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த வெடி விபத்துக்கான காரணம் எதுவும் நேற்று மாலை வரை கண்டறியப்படவில்லை என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவை மேற்கோள் காட்டி வெளிவந்த செய்திகள் தெரிவித்தன.

கணேமுல்ல கொமாண்டோ படைப்பிரிவு தலைமையகத்தில் இடம்பெற்ற வெடிவிபத்துக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக விசேட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் நேற்றிரவு கிடைத்த கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## 3 பொறுப்...

அதேவேளை - நேற்று பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா, தென் தமிழீழ மக்களின் பிரச்சினைகள் குறித்து முன்வைத்த விடயங்கள் எதையும் குறிப்பிடாததுடன், மீளவும் புலிகளின் தலைமைத்துவத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமாயின் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளார்.

அத்துடன், புலிகளின் தலைமைப்பீடத்துடன் வேண்டுமானால் நட்புறவு உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக குறிப்பிட்ட கருணா,

தாம் மீண்டும் புலிகளின் தலைமைப்பீடத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமாக இருந்தால், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோரை இயக்கத்தைவிட்டு விலக்க வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தார்.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.